மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா

ஜீவாகாரம்



அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1764) T.P.-2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 02 (27.11.2003) வியாழக்கிழமை இதழ் :58

## நாகர் கோவிலில் பத்துப் படையினர் பலி
## பயிற்சியின்போது நேற்றுமாலை சம்பவம்

நாகர்கோவிலில் உள்ள உயர் பாதுகாப்புவலய பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 10 படையினர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

நேற்று மாலை 6 மணியளவில் நாகர்கோவில் எழுதுமட்டுவாள் வீதியிலுள்ள தரவைசேற்று நீர்ப்பரப்பில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

நேற்று மாலை இந்தப் பகுதியில் 32 படையினர் கொண்ட அணி பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது 3 இராணுவத்தினர் அப்பகுதியில் உள்ள சேற்று நிலத்தினுள் புதைந்து உயிரிழந்தனர். இவர்களை மீட்பதற்கு முற்பட்ட வேளையே ஏனைய 7 இராணுவத்தினரும் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பலத்த முயற்சியின் பின் இவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணையை (12 ஆம் பக்கம் பார்க்க)

### தலைவரின் பிறந்த தினத்தில் இனிப்புப் பண்டங்கள் பரிமாற்றம்

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 49 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் இனிப்புப் பண்டங்கள் பரிமாறப்பட்டன.

யாழ்பல்கலைக்கழக மாவணவர்களால் நேற்று பரமேஸ்வரா சந்திப் பகுதியில் வைத்து வீதியால் சென்ற மக்களுக்கு பல்வேறு இனிப்புப்பண்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படும்
# கிறிஸ் பற்றனிடம் பிரபாகரன் தெரிவிப்பு!

(கிளிநொச்சி)

**அமைதி வழியில் பேச்சுக்கள் மூலம், எமது மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடியதான ஒரு தீர்வை எட்டுவதென்ற விடயத்தில் புலிகள் உறுதியாக இருப்பதாகவும் அரசாங்கத்துடனான போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக அமுல்படுத்துவதென்பதில் உறுதியாக இருப்பதாகவும் - தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றனிடம் இவ்வாறு தெரிவித்தார்.**



கிளிநொச்சிக்கு வருகை தந்த ஐரோப்பிய யூனியன் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தலைமையிலான குழுவினருடன் தலைவர் பிரபாகரன் பேச்சு நடத்துவதைப் படத்தில் காணலாம்.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு கிளிநொச்சிக்கு வந்த ஐரோபபிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றனை அரசியற்துறை நடுவப்பணியகத்தில் சந்தித்து பேச்சுநடத்தியபோதே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

விமானப்படை ஹெலி கொப்ரர் மூலம் கிளிநொச்சி வந்தடைந்த கிறிஸ் பற்றன் புலிகளால் வரவேற்கப்பட்டு அரசியற்துறை நடுவப்பணியகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அரசியற்துறை நடுவப்பணியகத்தில் கிறிஸ் பற்றன் தலைமையிலான குழுவினருக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையிலான பேச்சுக்கள் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகின. இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், தென்னிலங்கையில் ஒரு நிலையான (12 ஆம் பக்கம் பார்க்க)



## சகல அதிகாரமும் கொண்ட அரசியல் தலைமையுடன் பேசுவதற்காக எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றோம்!

# பேசுவதற்காக எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றோம்!

## தமிழ்ச் செல்வன் செய்தியாளரிடம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டிகள் முடிவுக்கு வந்து அரசியலில் ஒரு உறுதிப்பாடு ஏற்பட்டு பேச்சுக்கள் முன்னெடுக்கக்கூடிய சகல அதிகாரங்களையும் கொண்ட ஒரு அரசியல் தலைமை உருவாக வேண்டும் என்பதனையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்பற்றன் விடுதலை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடிய பின் செய்தியாளர் மத்தியில் உரையாற்றும்போது, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

கேள்வி: ஐரோப்பிய யூனியனிடம் விடுதலைப்புலிகளால் கோரிக்கைகள் ஏதும் முன்வைக்கபட்டதா?

யுத்த நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டு, 21 மாதகாலம் கடந்துள்ளது. இந்த உடன்படிக்கையின்படி எதுவுமே நடக்கவில்லை. மக்களது இயல்பு வாழ்க்கையும் ஏற்பட்டிருக்கவில்லை. இராணுவ நெருக்குவாரங்களும், (12 ஆம் பக்கம் பார்க்க)





கிளிநொச்சி வந்த ஐரோப்பிய யூனியன் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றனை தலைவர் பிரபாகரன் வரவேற்பதை முதற்படத்திலும், ஜோய் மகேஸ்வரன் கைலாகு கொடுப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### திருமலையில் இரு தமிழர்கள் காடையர்களால் தாக்கப்பட்டனர்

திருகோணமலையில் இரு தமிழ் மக்கள் காடையர்களால் தாக்கப்பட்டனர்.

திருகோணமலை அந்தோனியார் கோயிலடியில் வைத்து, வீதியால் சென்றுகொண்டிருந்தவர்களான சந்தியானந்தன், லிங்கேஸ்வரன் ஆகிய இருவருமே தாக்கப்பட்டவர்களாவர். இந்தத் தாக்குதலில் பலத்த காயமடைந்த இவர்கள் இருவரும், திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நடைபெறும் மாவீரர் நாள் நிகழ்வு

இன்று நடைபெறும் மாவீரர் நாள் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மாவீரர் நாள் உரை மாலை 5.40 மணிக்கு ஆரம்பமாகி 6 மணி 04 நிமிடம்வரை புலிகளின் குரல் வானொலி மூலம் ஒலிபரப்பாகும்.

6.05 மணிக்கு தாயகம் எங்குமுள்ள ஆலயங்களில் ஒரு நிமிடம் மணி ஒலி எழுப்பப்படும். இதனைத் தொடர்ந்து 6.06 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்படும். நினைவொலி எழுப்பப்படும் போது வீதிகளில் நடந்து செல்பவர்கள், வாகனங்களில் செல்பவர்கள் இறங்கியும் ஒரு நிமிடம் அகவணக்கம் செலுத்தவேண்டும். 6 மணி 7 நிமிடத்துக்கு மாவீரர்களின் கல்லறைகளுக்கு முன்பாக சுடரேற்றல் நடைபெறும்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஏயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# மாவீரர்களின் பெற்றோர் நெடுந்தீவில் கௌரவிப்பு

மாவீரர்களது பெற்றோர் கௌரவிப்பு நேற்றுக்காலை நெடுந்தீவில் நடைபெற்றது. நெடுந்தீவைச் சேர்ந்த 54 மாவீரர்களது பெற்றோர், நெடுந்தீவு மத்தி மாவீரர் நினைவுச் சுடர் பகுதியிலிருந்து பான்ட் வாத்திய அணிவகுப்புடனும், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் புடைசூழ பிரதான வீதியின் ஊடாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

தமிழீழத் தேசியக் கொடியினை தீவக சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.கோபாலசிங்கம் ஏற்றிவைத்தார். மாவீரர் பொது மலர்மாலையை நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் எஸ்.டி.தில்லைநாதன் அணிவித்துவைத்தார். அதனைத் தொடர்ந்து, மாவீரர்களின் பெற்றோர்கள் நினைவுச் சுடரேற்றி மலர் மாலைகள் அணிவித்தனர்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து, நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. பி.ஜோசப் கெனடி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் - பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். நேற்றைய நிகழ்வில் சிறப்புரையாக தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து, நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியில் மாவீரர் பெற்றோர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் மதிய உணவு விருந்து பசாரமும் வழங்கப்பட்டது. கொட்டும் மழையின் மத்தியில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### தலைவரின் பிறந்ததினத்தில் அன்னதானம் வழங்கல்

தமிழீழ தேசியத் தலைவரின் 49 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, யாழ்.நகர வர்த்தகர்களால் - சத்திரச் சந்தியில் அமைந்துள்ள வைரவ ஆலயத்தில் நேற்று சுமார் 750 வறிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மாவீரர் தின நிகழ்வுகளில் சிங்கள மக்களும் பங்கேற்பு

குடாநாட்டில் மாவீரர் தின நிகழ்வுகளில், தென்பகுதியிலிருந்து வந்த சிங்கள மக்களும் கலந்துகொண்டுள்ளனர். தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிகளைச் சுற்றிப் பார்ப்பதற்கு வந்த சிங்கள சுற்றுலாப் பயணிகள் - மாவீரர் துயிலுமில்லங்களுக்குச் சென்று, மலர்களை தூவி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ஒரு வாரத்திற்குள் சுமார் 500 இற்கும் மேற்பட்ட சிங்கள மக்கள், யாழ்.குடாநாட்டிலுள்ள நான்கு மாவீரர் துயிலுமில்லங்களுக்கும் சென்று மலரஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தென்பகுதியிலுள்ள ஒரு சில அரசியல் கட்சிகளிடமே இனவிரோதமான மனப்பாங்குகள் உள்ளன. ஆனால், அவ்வாறான குரோதம் - ஒட்டுமொத்த சிங்கள மக்களிடமும் இல்லையெனவும், நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எமது இனத்தின் விடுதலைக்காக, தம் உயிர்களைக் கொடுத்த மாவீரர்களின் துயிலுமில்லங்களுக்கு சென்று, அவர்களுக்கு உரிய மரியாதையுடன் மலரஞ்சலிகளை செலுத்தி அவர்களைக் கௌரவித்துள்ளனர்.

### திட்டமிடல் அலுவலகம் திறப்பு

திட்டமிடலுக்கும், மேம்பாட்டுக்குமான மாமனிதரும் பேராசிரியருமான அ.துரைராசா நினைவு செயலகம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப் படவுள்ளது.

நாளைமறுநாள் காலை 10.30 மணியளவில் பரவிப்பாஞ்சானில் இந்த அலுவலகம் திறந்துவைக்கப் படும். இந்த அலுவலகத்தை மாமனிதரும் பேராசிரியருமான துரைராசாவின் துணைவியார் திறந்துவைப்பார்.


செவிப்புலன் வலுவற்றோரின் கைத்தொழில் பேட்டையால் 26.11.2003 இல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டின் பரிசுபெற்ற இலக்கங்கள்.

☞ முதலாம் பரிசு - இல் 5529
☞ இரண்டாம் பரிசு - இல் 3899
☞ மூன்றாம் பரிசு - இல் 5399

ஆறுதல் பரிசு இலக்கம்
9714, 8472, 1537, 3082, 8141

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்,
16/2 சீனியர் லேன்,
கலட்டி.
(535)

க.சுரேந்திரநாதன்,
செயலாளர்.



எம் மண்ணிற்காய் தம்மை ஆகுதியாக்கியவர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்

❖ ஆங்கில மருந்து வகைகள்
❖ பால் உணவு வகைகள்
❖ பாடசாலை உபகரணங்கள்
❖ குரோசரி பொருட்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

அம்பாள் பார்மசி

இல: 01, நவீன சந்தை,
சாவகச்சேரி.
T.P: 060 2213313
(சி-1831)



ஈழத்தின் மாவீரர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்

நங்கையர் விரும்பும் நவநாகரிக டிசைன்களில் தங்க ஆபரணங்களை நம்பிக்கையுடனும், உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.



இந்திரன் ஜுவல்லர்ஸ்

இல: 10 நவீன சந்தை,
சாவகச்சேரி.

கிளை:
நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்
இல: 213 - A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Mobile : 0777-310293
(சி-1830)



எம் தேசத்திற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்

என்றும் கூட்டுறவை வளர்த்து நிற்கும்
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

தமது சேவைகளையும் நினைவு கூருகிறது

நுகர்ச்சி நிவாரண விநியோகத்துடன், வாடகைச்சேவை, ஒப்பந்த சேவை, பாலர்கல்வி, புலமையாளர் - படைப்பாளிகள் ஊக்குவிப்பு, சமூக, கலை, கலாசார அபிவிருத்திச்சேவை, சேமிபிற்கு கூடியவட்டி, கடனுக்கு குறைந்தவட்டி.

நடைமுறைப்படுத்தும் எமது கிராமிய வங்கிச் சேவை

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,
தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.
(சி-1825)



தமிழ்மண் விடிவுக்காய் தம் உயிரை நீத்த
மாவீரர்களுக்கு எம் இதயபூர்வமான அஞ்சலிகள்

ஓவ்செட் துறைகளின் பயன்பாட்டிற்கோர் சிறந்த வரப்பிரசாதம். விழாமலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

ஹரிஹரனன் பிறின்டேர்ஸ்

424, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2222717
(சி-1832)



எம் மண்ணிற்காய் தம்மை ஆகுதியாக்கியவர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் எந்த நிகழ்ச்சிகளையும் புதுப்பொலிவுடன் நவீன டிஜிற்றல் வீடியோ கமராக்கள் மூலம் துல்லியமான முறையில் படம் பிடிக்கவும் கணினி மூல படத்தொகுப்பு கறுப்பு, வெள்ளை படப்பிடிப்பு, அல்பம் தயாரித்தல் மற்றும் உள்ளூர் வெளியூர் தொலைத்தொடர்பு வசதிகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.



சுதா வீடியோ அன் ஸ்ரூடியோ

உரிமையாளர்:
த.சுதாகர்,
வதிரி வீதி,
உடுப்பிட்டி.



T.P: 021 - 226 - 3707
Mobile: 0777 - 568530
(சி-1826)



தேச விடுதலைக்காக ஈழமண்ணில் வித்தாகிய
உறவுகளுக்கு எம் இதய அஞ்சலிகள்

சீமாட்டி புடவைக்கடல்

❖ அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்
❖ அழகுசாதனப் பொருட்களின் விநியோகஸ்தர்கள்

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2222196
(சி-1828)

யாழ்ப்பாணம்.



# மாவீரர் நாள் - 2003

கார்த்திகை 27





# சுதந்திரத்துக்காக தம்முயிரை ஈகம் கொடுத்த மாவீரர்கள்

'விடுதலை என்பது அக்கினிப் பிரவேசம். நெருப்பு நதிகளை நீந்திக்கடக்கும் நீண்ட பயணம். தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்குத் தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள் என்கிறார் - தமிழீழத் தேசியத் தலைவர்.

சங்கரும், செல்லக்கிளியும், மில்லரும், அன்னை பூபதியும், கிட்டண்ணாவும், தியாகி திலீபனும், வானதியும் இன்னும் ஏராளமான அத்தனை தியாகத் தீபங்களும் எங்களுக்கு எச்சங்களாகத் தங்கள் தியாகங்களைத் தான் விட்டுச்சென்றுள்ளார்கள். அவர்கள் அத்தனை பேருமே இறந்தது எமக்காக. எமக்காக என்ற ஓர் பன்மைப் பதத்தைப் பாவிப்பதை விட, எனக்காக என்ற ஓர் ஒருமைப் பதத்தை ஓங்கி ஒரு முறை சொல்லிப்பார்ப்பது பொருத்தமானது.

வாழ்க்கையைத் தீர்க்க தரிசனமாகப் புரிந்துகொண்ட இவர்கள் இதயம் மிகவும் மென்மையானது, ஆனால் உறுதியானது, வீரத்தையும் தியாகத்தையும் தம் குருதியில் நிறைத்துக் கொண்டவர்கள் இவர்கள்.

ஹிட்லரின் அட்டூழியத்திற்கு, எதிர்ப்புக் காட்டாத ஒரு இனத்துக்கு இழைக்கப்பட்டதுபோன்ற கொடிய அநீதி - எமது தியாக வீரர்கள் எதிர்ப்புக் காட்டியதால், எமது இனத்துக்கு ஏற்படவில்லை. இதோ அந்தக்கோர வரலாறிலிருந்து ஒரு பகுதி -

'அவுஸ்விச் ஜேர்மனியின் ஒதுக்குப்புறமான பகுதியொன்றில் அமைந்திருந்த சிற்றூர். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் எந்தவித பிரபலமுமற்றுக்கிடந்த இந்தச் சிற்றூர் -போர் முடிந்த பின், நரகலோகத்தின் ஒருபெரும் நகரமாக, உலக மாந்தரால் சித்தரிக்கப்பட்டது.

ஜேர்மனியின் ஆட்சியாளனாக அடொல்ப் கிட்லர் தெரிவுசெய்யப்பட்டவுடன், யூதர்களைப் பூண்டோடு ஒழிக்கும் தனது பகிரங்கக் கொள்கையை அமுல்படுத்தத் தொடங்கினான். இரண்டாம் உலகப்போர் தொடங்கியதும் - ஜேர்மனியிலும், நாஜிப் படைகளால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பிய நாடுகளிலும் வசித்த யூதர்கள் - சுற்றிவளைக்கப்பட்டு, தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இலட்சக்கணக்கில் கைது செய்யப்பட்ட யூதர்களை விரைவாகவும், செலவு குறைவாகவும் கொன்றொழிப்பதற்காக, விஷ வாயுக் கூடங்களை அமைக்க 'ஹிட்லர் உத்தரவிட்டான்.

இவ்விதம், நச்சுவாயுக்கூடத்துடன் நிறுவப்பட்ட பாரிய தடுப்பு முகாம்களில் ஒன்று 'அவுஸ்விச்' . மொத்தம் 60 இலட்சம் யூதர்கள் - நாஜிகளால் கொல்லப்பட்டனர். இவர்களில் 40 இலட்சம் மக்களின் உயிர் 'அவுஸ்விச்' இல் வைத்துத்தான் அழிக்கப்பட்டது.

'அவுஸ்விச்' கொலைக்களத்தின் பிரதம அதிகாரி 'டொக்டர் ஜோசப் மெஞ்சேல்' என்பவன். இவனும் ஒரு மருத்துவ நிபுணனாவான். இவனை கிரிமினல் டொக்டர் என்றே நூலாசிரியர் வர்ணிக்கின்றார். யூதர்கள் மேல் விஞ்ஞானப் பரிசோதனைகளை நடாத்தி, யூத இனம் தொடர்பான கிட்லரின் இனக்கொள்கை சரியானது என்பதை நிரூபிக்கும் உயிர்க்கூற்று ஆதாரங்களை, நாஜித் தலைமைப் பணிமனைக்கு அனுப்புவது இவனின் முக்கியபணி. இந்த மருத்துவப் பணிகளைச் செய்து கொடுத்து உதவும் கட்டாயபணியே நூலாசிரியரின் சிறைப்பணியாகும்.

'ஒருநாள் முதுகு கூனலான தந்தையையும், ஒரு கால் ஊனமான மகளையும் எனது சத்திர சிகிச்சை மேசைமுன் கொண்டுவந்து நிறுத்தினர். ஒரு கோரநிகழ்ச்சியை நூலாசிரியர் கூறத்தொடங்குகின்றார். 'இவர்களுடைய அங்கவீனத்திற்கு என்ன காரணமென்று மருத்துவ அறிக்கை தருமாறு, நாஜி அதிகாரி கேட்டான். அந்த அப்பாவித் தந்தையையும், அதிர்ஷ்டம் கெட்ட மகளையும் மேசை மீது படுக்க வைத்துப் பரிசோதித்து முடித்தேன். பின்னர் இருவரையும் அடுத்த அறைக்கு நாஜி அதிகாரி கூட்டிச்சென்றான். அங்கே உடைகள் உரியப்பட்டு, பின் தலையில் சுட்டு, இருவரையும் சாகடித்தான். செத்த இருவரது பிணங்களும் மேசையில் கிடத்தப்பட்டன. பிணத்தை அறுத்து அங்கவீனத்திற்கான உட்காரணிகள் யாவை என அறிக்கை தருமாறு கேட்டார்கள். சற்று நேரத்தில் 'அவுஸ்விச் இன் தலைமை அதிகாரி நாஜி அங்கே வந்தான். இரண்டு பிணங்களையும் பார்த்துவிட்டு, 'அவற்றை எரிக்காது எலும்புக்கூடுகளாக மாற்றி, பேர்லினிலுள்ள மானுடவியல் நூதனசாலைக்குக் காட்சிப் பொருளாக அனுப்ப வேண்டும் என்றான். தகுந்த இரசாயனப் பொருட்கள் இல்லாததால், பிணங்களைப் பாரிய அண்டாவுக்குள் போட்டு, நீர் ஊற்றி அவிக்கும் படி கூறினேன். 5 மணிநேரமாக அவித்தபின், தசைகள் பெரும்பாலும் எலும்பைவிட்டுக் கழன்றுவிட்டன. எனினும், குளிர்வடையும்போதே மிகுதியும் சுலபமாகக் கழரும் என்ற காரணத்தால், நான் சற்றுச் சரிந்து ஓய்வெடுத்தேன்.

இவ்வாறு வர்ணித்துச் சென்ற நூலாசிரியர், அருவருப்பூட்டும் அவலமொன்று திடீரென அங்கே நடந்தேறிய விதத்தையும் விளக்குகின்றார்.

'அப்போது எனது உதவியாள் ஓடிவந்து, டொக்டர் அந்த அவிச்ச பிணங்களின் தசைகளை - போலந்துக்காரர்கள் தின்றுவிட்டார்கள் என்றார். துள்ளி எழுந்த நான் 'காலிடற அடுப்புநோக்கி ஓடினேன். எலும்பு, தோலுமாகக் காட்சியளித்த இரண்டு கைதிகள் - இறைச்சி சமைக்கப்படுகின்றது என நினைத்து, பசியில் மனிதத் தசைகளை உண்டு கொண்டிருந்தனர். அவர்களைத் தடுத்து, உண்மையை நான் கூறியபோது, அவர்கள் பயந்து, வாந்தி எடுத்து செயலிழந்து நின்றார்கள். மண்ணெய்யில் எலும்புக்கூடுகள் கழுவப்பட்டு, எனது சத்திர சிகிச்சை மேசையில் இரண்டு எலும்புக்கூடுகளும் வைக்கப்பட்டன.

கல்நெஞ்சங்களையும் உருகச் செய்யும் இந்த கொடூர சம்பவத்திற்கு- நூலாசிரியர் இப்படி முத்தாய்பு வைக் கின்றார்.

'காலையில் உயிருடன் பரிசோதித்த தந்தையும், மகளும் -சிறிது நேரத்தில் அதே மேசையில் பிணங்களாகக் கிடத்தப்பட்டனர். இப்போது மாலையில் அவர்கள் எலும்புக்கூடுகளாக அந்த மேசையில் கிடக்கிறார்கள்.



இப்படியே நாம் கூற, நீங்களும் கதை கேட்டுத் திகிலடைகிறீர்கள் அல்லவா. இது எங்கள் மண்ணிலும் நடந்தேறியிருக்கும். மறந்து விடாதீர்கள். வைத்தியர்கள் எம் உடலை அவித்து, எலும்பை எடுக்காவிட்டாலும், 1977 ஆம் ஆண்டிலும், 1983 ஆண்டிலும் துடிக்கத்துடிக்க எரியும் தார்ப் பீப்பாக்களில் எறிந்ததை எப்படி நாம் மறக்கமுடியும். குழந்தையொன்றை அடுப்பிலிருந்த எண்ணெய்ச் சட்டியில் எறிந்ததையும், இன்னுமொரு குழந்தையை உயிரோடு இரண்டாகப் பிய்த்து எறிந்த கோரங்களையும் எப்படி நாம் மறக்க முடியும்.

ஹிட்லரின் கொடூரங்க ளும் நிட்சயம் எங்கள் மண்ணில் நடந்தேறி, எம் பிரதேசமே, 'அப்பே ஈலம என்ற பெயரில் புதிய சிங்கள தேசமாகக் காட்சிதந்திருக்கும். யாருக்காவது சந்தேகமிருந்தால், கிருஷாந்தி, சாரதாம்பாள், இன்னும் அழித்துக் கொல்லப்பட்ட செம்மணி உடல்கள், நெடுந்தீவுக்கடலின் பயங்கரம், பஸ்ஸில் பயணித்தவர்களெல்லாம் அழிந்து போன உண்மைகள், இனக் கலவரங்களில் அழிந்து போனவர்கள், வெலிக்கடை உட்பட, பண்டாரவளை மற்றும் அனைத்துச் சிறைகளிலும், பூசா போன்ற தடுப்பு முகாம்களிலும் வதையுண்டு இறந்து போன தமிழ் மக்கள், குமார் பொன்னம்பலம் போன்ற பலமான எதிர்ப்புக் குரல்களையெல்லாம் நினைத்துப் பார்த்தால், எமது மண் அப்படியே இல்லாமல்போய், புதிதாக எழுதப்பட்ட மகாவம்சத்தில், 'சிறிலங்கா ஆமி' என்ற சிங்களக் குடியேற்றம் கண்ட பூமி என்று எழுதப்பட்டிருக்கும். இது சரி என்று படுகிறதா? இல்லை என்று பட்டால், இந்த அழிவைத் தடுத்தவர்கள் யாரென்றும் புரிந்திருக்கும்.

வேறுயாருமல்ல, எமக்காகத் தம்மைக் கொடுத்த மாவீரர்கள்தான். அவர்களின் ஈகத்தினால்தான், எம் இருப்பை 'நாம் உறுதிப் படுத்திக் கொண்டுள்ளோம். ஓடி ஒழிந்து இங்கே வாழும் நாமோ, நம் வசதிகளோ, உதவிகளோ, ஊடகங்களோ அல்லது வேறு எந்த உந்து சக்தியோ - எம் மண் அழிவைத் தடுத்து நிறுத்தவில்லை. எம் மண் அழிவைத் தடுத்தவர்கள் - இந்தத் தற்கொடையாளர்களே. இவர்களின் விழுதுகளில்தான் நாம் தொங்கிக் கொண்டிருக்கிறோம். தலைவனின் நெஞ்சுரத்தில்தான், இவர்கள் குருதி மீண்டும் மீண்டும் தமிழீழ இலக்கைப் பிரசவித்து நிற்கிறது. இவர்கள் தியாகங்கள் - கார்த்திகை 27 இற்கு மட்டும் சொந்தமானவை அல்ல. வருடத்தின் 365 நாட்களும், நாம் வாழும் காலமனைத்தும் எம்மில் அனுமானிக்கப்பட்டு, தியானிக்கப் பட்டு, ஜீரணிக்கப்பட வேண்டியவை.

சத்தியத்தை நேசிக்கும் உறுதி பூண்ட நெஞ்சம் இவர்களுடையது. இவர்களுடைய தியாகத்திலே நிறைந்திருப்பது எல்லாம் தமிழின விடுதலை ஒன்று மட்டும்தான்.

'அடிமைபோல் வாழ்ந்த மக்களிடம் ஆக்ரோஷத்தைக் கொடுத்து, தட்டிக் கேட்கும் குரலைக் கொடுத்த தலைவனின் கைகளைப் பலப்படுத்தி, தொடர்ந்து நடப்போம். வெற்றி என் பதே எமது இலக்காக இருக்கட்டும்.



# ஊர்புடைசூழ வந்துள்ளோம் எம் இனிய மாவீரரே இன்றேனும் ஒரு தடவை எமக்காக விழி திறவீரோ..

வரலாற்றின் கதாநாயகர்களான மாவீரச் செல்வங்களுக்கு எம் இனிய தலைவன் வகுத்துக் கொடுத்துள்ள எழுச்சி நிறைந்த, வீரம் மிக்கநாள் இந்த மாவீரர் நாள்.

இது பல்வேறு காலப்பகுதியிலும் பல்வேறு சந்தர்ப்பத்திலும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பதினேழு ஆயிரத்து எழுநூற்று மூன்று மாவீரர்களையும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் இன்னும் சுருக்கமாகச் சொல்லப் போனால் ஒரே நிமிடத்தில் அனைவரும் நினைத்துக் கொள்ளும் நாள்.

இந்த எழுச்சி நாளில் எம்முடன் பேசி, பழகி, உண்டு, உறங்கியவர்களை ஒரு கணம் நினைத்து அவர்களது நினைவலைகளை மீட்டுப் பார்க்கின்றோம். மாவீரர் வாரமாக கடந்த ஆறு தினங்களும் அலங்கார வளைவுகளை அமைத்தும், தோரணங்கள், கொடிகள் கட்டியும், விடுதலைப் பாடல்களை இசைத்தும், மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை சாற்றி அலங்கரித்தும் நினைவு கூர்ந்த மக்கள் இன்று மாலை ஒரே நேரத்தில் அவர்களைத் துயிலும் இல்லங்களில் தரிசிக்கப் போகின்றனர்.

கல்லையும் இளகவைக்கும் நிகழ்வொன்று இன்று மாலை 6.மணி 7 நிமிடத்திற்கு இடம் பெறப் போகின்றது. எமக்காக எமது வாழ்விற்காக எமது எதிர்காலச் சந்ததிக்காக, எமது சுதந்திரத்திற்காக, கரும்புலிகளாய், தரைப்புலிகளாய், தம் இன்னுயிர்களை துறந்தவர்களை அவர்கள் துயின்று கொண்டிருக்கும் இல்லங்களுக்குச் சென்றுசந்திக்கப் போகின்றோம்.

நீங்கள் மாமாஎன்று அழைத்தவர்கள், நண்பனாய், நண்பியாய் உங்களோடு பழகியவர்கள், அண்ணனாய், தங்கையாய், அக்காவாய், தம்பியாய், கட்டிப்புரண்டு சண்டை செய்து கூடிக்குலாவியவர்கள். உயிர் பிரிந்த அந்த வேளையில் யாரை நினைத்தார்களோ யார் அறிவர்.?

ஆனால் அவர்கள் அனைவருமே தாய் மண்ணிற்காகவும் தமது மக்களுக்காகவும் மரணித்தார்கள், என்பதும் இன்று விதைகளாகி நடுகற்களுள் உறங்குகின்றார்கள் என்பதும் எமக்குத் தெரியும்.

இன்று துயிலுமில்லம் செல்கின்ற எம்மைத் தான் அந்த வீரன் மண்ணில் வீழ்கின்றபோது எண்ணியிருப்பானானால் விண்ணிலிருந்து பார்க்கின்றபோது எத்தனை மகிழ்வடைவான் என்றென்னும் போது ஓர் நிறைவை நாம் காணலாம்.

துயிலுமில்லத்திற்கு அலையென எழுந்து சென்று அஞ்சலி செலுத்தும் நாம் ஒவ்வொருவரும் அங்கு நின்று கொண்டு எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் எதிரியாக நினைத்து சிங்களவர்களால் நாம் துன்புறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களையும் ஒவ்வொரு கட்டாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட மையும் 1948, 1949 களில் இந்தியத் தமிழர்க்கு ஏற்பட்ட குடியுரிமை பறிப்பு, மற்றும் நாடு கடத்தல் நிகழ்வுகளையும், 1983 இன் இனக் கலவரத்தையும் பற்றிச் சிந்திப்பதை மட்டும் சொல்லவில்லை.

மிக அண்மைக்காலத்தில் அதாவது 1987 ஆம் ஆண்டு இடம் பெற்ற 'ஒப்ரேசன் ,லிபரேசன்' இடி முழக்கம், முன்னேறிப்பாய்தல், சூரியக்கதிர், சத்ஜெய, ரிவிரச, முதலான ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையிலும் நாம் பட்ட துன்பங்களையும் இவ்வேளை எமக்காக எம்மைக்காக்க எதிரிக்கு முகம்கொடுத்து போராடிய அந்த வேங்கைகளையும் எண்ணிப் பாருங்கள்.

நாம் பாயிலும், மெத்தையிலும் குளிருக்குப் போர்வையும், நுளம்புக் கடிக்கு பாதுகாப்பும் தேடி நிம்மதியாக உறங்கிய போது அந்த மாவீரர்கள் மழையிலும், பனியிலும், சேற்றிலும், உணவின்றி, உறக்கமின்றிக் களமாடியதை எண்ணிப் பாருங்கள் எமது மனதில் இருக்கும் அவர்கள் மீதான அன்பும், மதிப்பும், மேலிட்டு எமக்குள் ஒரு புது சக்தியும், சத்தியமும் பிறப்பதை உணர முடியும்.

இன்றைய நாளில் தமிழீழத்தில் உள்ள அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் ஒளி தீபம் ஏற்றப்பட்டு மாவீரர் நினைவுப் பாடல் ஒலிக்க விடப்படும். தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தணப் பேழைகளை நினைத்து உறவுகள் கண் கலங்கும் அந்த ஒரு சில நிமிடங்களை எண்ணிப் பார்க்கும் போது மயிர்க் கூச்செறியும்.

உறவுகள் அனைவரும் வந்து நின்று கண்ணீர் மல்கத் கெஞ்சுகின்றோம் எங்கே எமது மாவீரச் செல்வங்களே ஒரு முறை விழி திறக்க மாட்டீர்களா, எமக்காக ஒரு முறை எழுந்து எம்மைப் பார்த்து விட்டு மீண்டும் உங்கள் வீரப் படுக்கையில் உறங்குங்கள் என்று கூறி அண்ணா என்றும், அக்கா என்றும், தம்பி என்றும், மகனே, தங்கையே, மகளே, என்றும் உறவுசொல்லி உருகும் காட்சியை எழுத்தால் வடிக்க முடியாது. சொல்லால் விளம்ப முடியாது. உள்ளத்தை உருக்கும் இந்த நிகழ்வின் முடிவில் அவர்கள் கல்லறைகள் மீது எம் இனமே திரண்டு உறுதி எடுத்துக்கொள்ளும்.

இக்காட்சியை சங்ககால நடுகல் வழிபாட்டைப்பேணி புறநானூறுபாடிய புல்வர்கள் கூடக் கண்டிருப்பாரோ எனஎண்ணத் தோன்றும்.

மீண்டும் மீண்டும் எம்மண்ணில் எழும்சக்தி பெற்ற மாவீரர்களைப் போற்றி இன்றைய தினத்தில் எமது இனத்தின் தலைவன் ஒப்பற்ற உரையொன்றை ஒவ்வொரு முறையும் வழங்கி வருகின்றான்.

ஒவ்வொருபுலி வீரனும் மாவீரன் ஆகுமுன் தலைவனிடம் எத்தனை வேண்டுதலை விடுத்திருப்பான், எமது இனம் வாழ்வதற்காய் பாடுபடவேண்டிய எத்தனை தேவைகளை வலியுறுத்திச் சென்றிருப்பார்? அத்தனை குரல்களும் என்றும் அவன் உள்ளத்தில் ஓங்கி ஒலிக்கின்றமையில் தான் மாவீரர்கனவை உறுதிப்பட நிலைநாட்ட அரும் பாடுபட்டு வருகின்றார். அவருக்குத் தோள் கொடுக்கும் பாரிய பொறுப்பை எமது தமிழினமே சுமந்து நிற்கின்றது.

களத்தினில் வெங்களமாடி வீழ்ந்த வேங்கையின் விதைகுழி மீதொரு சத்தியம் செய்வோம். என்றும் எமது விழிகள் உம்மை நினைக்கும் போது மட்டும்தான் ஓர் துளிக் கண்ணீர்உமிழுமே அன்றி பகைவனின் மிரட்டலுக்கும், ஆக்கிரமிப்பிற்கும் பயந்து அல்ல, விடியும் ஓர் பொழுதில் மகிழ்வு ஒன்றே தமிழனுக்கு அதிகாலைத் தென்றலாகவும், மாவீரர் புகழே சுப்பிரபாதமாகவும் அமையும் என்பது உறுதியென உறுதியெடுத்துக் கொள்வோம்.

இரக்கமற்று இராணுவ வரன்முறை தெரியாது உங்கள் கல்லறைகளையே இடித்தழித்த பகைவன் சமாதான வழிதவறி எம்மை அழிக்க நினைத்தால் அவனுக்கும் இங்கு ஓர் இடத்தில் சமாதி வைப்போம் என வழிகின்ற விழிநீரில் உறுதி எடுத்துக் கொள்வோம்.

உணர்வில் ஊறிய மாவீரர் உறவானது உலகில் தமிழன் உள்ளவரை தொடரும், உம் பணியை வெற்றியதை எய்தும் வரை தொடர்வோம். என்றும் கல்லறைகள் மீது உறுதியெடுத்துக் கொள்வோம்.

செந்துணைன்

# மாவீரர் நாள் - 2003

கார்த்திகை 27

## சூரிய பூக்கள்



யாழவன்
யாழ். பல்கலைக்கழகம்

ஈர விழிகளை நெஞ்சில் சுமந்து
கையில் அர்ச்சனைப் பூக்களுடன்
எம் காவியப் புதல்வர்களுக்கு
காணிக்கையாக்கும்- என்
சூரியப் பூக்கள்.

சூரியனின் செந்தணலினை
கவிவரிகளினால்....
வரம்பிடத் தான் முடியுமா?
வாழ்வின் வசந்தங்களிற்கு
நஞ்சூட்டி - எம்
தேசத்தை ஆக்கிரமித்து
அட்டகாசம் புரிந்து
சுடுகாடாக்கும் சூக்குமங்கள்
தான் எத்தனை?

16 வயதுப் பாலகன்
எங்கள் தலைவன்
அக்கினிக் குழம்புடன் பிறந்தவன்
சிறு பிள்ளை வேளாண்மை
வீடு வந்து சேராது
ம்...
பழ மொழிகூட பொய்த்துப் போனது
எங்கள் தாயகத்தில்

அன்று...!
கோப்பாய் வெளியில்
அரக்க களத்தை தீயிட்டாள் மாலதி
இன்று...!
எத்தனை மாலதிகள்?
அண்ணனின் பாசறையில்.
அரக்க இயந்திரங்கள்
மார்பைக் கிழித்து
இரத்தம் சிந்தி
சிதைத்து....
சின்னா பின்னமாக்கி
கொன்று குவித்து
கொட்டாவி விட்டது.
ஆனால் - எங்கள்
மண்ணில் வீர மூச்சு ஓய்திடவில்லை

கடலும் கரையும்
விண்ணும் மண்ணும்
அடிமுடி தேடிய புதுமைகள்
பார்த்துப் பார்த்து
புறமுதுகு காட்டி ஓடிய ஓநாய்கள்
ஒற்றைக்கண் பிச்சைக்காரியின்
வளர்ப்பு நாய்கள்....
இன்னும் ஊளையிட்டு
முடியவில்லை .....
தாவிப் பாயும் அரசே
எம் மறவர்கள்
தன் மானமுள்ளவர்கள்

நெருப்பாறுகளைக் கடந்து
வெட்டித் துண்டாக்கி
சீறிப் பாய்ந்த சிறுத்தைகள்
அனலென புயலாகி
எரிந்த எரிமலைகள்
அக்கினிக் குழந்தைகள்
தலைவன் - அவன்
உதிரத்தில் ஊறிக் கொண்ட
துணிக்கைகள்.

விதை நிலம் எம்நிலம் செந்நிலம்
உறங்கும் விதைகளிற்கு
உளியிட்டது அரக்க கூட்டம்
அரக்க இயந்திரமே!.......
உனக்கொரு விண்ணப்பம்
அருமை பெருமை புரியாது
மாவீர மணிகளின்
நெஞ்சில் மேல்
கதறக் கதற உன்
இயந்திரத்தை ஏற்றினாய்
கூலிப்படையே!
துயில்கையில் கூட நீ
நிம்மதி குலைத்தாய்
கல்லறைகள் ஒவ்வொன்றையும்

ஒவ்வொரு கல்லாய்ப் பொறுக்கி
கனத்த நெஞ்சுடன் கட்டிவிட்டோம்.
பிணந்தின்னிப் பிசாசே
உனக்கு எப்படி புரியும்
மாவீரர்களின் மாண்பு!

தாயகக் கனவுகளை சுமந்து
விழிமூடிக்........
கண்ணயர்கிறீர்களா?
உங்கள் கனவுகளுக்காய்
"பொங்குதமிழ் ..,.......
கொண்டெழுந்தோம்
உங்கள் ஆயிரம் ஆயிரம்
கதிர்கள் - எம்
மண்ணின் கிருமிகளைக் கொல்லும்
கனவுகளுடன் நம்பிக்கையுடன்
என் சூரியப் பூக்களைத்.....
தூவிக் கொள்கின்றேன்.

## நெருப்புத் துண்டங்கள் நீங்கள்



மாவீரர் உங்கள் சுவடுகள்
மரிக்கவில்லை வாழ்கிறது
மானங்காத்த உம் வாழ்வு
மறையவில்லை தெரிகின்றது!

மக்களையும் மண்ணையும்
மாண்புற நேசித்த
மறவர் உங்கள் பாதங்களை
மனதாரத் தொழுகின்றோம்!

வஞ்சகரின் வாள்வீச்சால்
வதைபடும் எம்மினத்தை
நெஞ்சில் நிறுத்தி எழுந்த
நெருப்புத் துண்டங்கள் நீங்கள்!

உதிரத்தையும் உடலையும்
உரிமைக்காய் தாரைவார்த்த
உங்கள் நாமங்கள்
உண்மையில் உன்னதமானதே!

எங்கள் ஈழத்திருநாட்டில்
எழுந்து ஜொலிக்கும் நாயகர்களாய்
உங்கள் நினைவுகள்
நிஜம் பெற்று வாழும்!

புதையும் போதும் விதையாகி
புதுமை செய்த உம் இலட்சியங்கள்
உதயமாகும் நாள்தேடி
உம்முடனே பயணிப்போம்!

சூரியநிலா, ஈச்சமோட்டை

## கார்த்திகை 27

கார்த்திகை இருபத்தி ஏழு
தமிழினம் கண்ணீரில்
தீபம் ஏற்றும் நாள்!

எல்லைகளில்
காவலிருந்த பிள்ளைகளின்
கல்லறைகளில் கதறி அழும்நாள்!

தேசம் எல்லாம்
புயல் போல வீசியவர்களை
பூக்கள் கொண்டு அர்ச்சிக்கும் நாள்!

நாம் தூங்க
விழித்திருந்தவர்கள் - இவர்கள்
தூங்கக் காணும் நாள்!

இவைகள் கல்லறைகள் அல்ல
எம் தேச விடுதலைக்கு - நாம்
கொடுத்த விலைகள்....

மாண்டு போனவர்கள் அல்ல
எம் மண்ணை எதிரியிடம் இருந்து
மீட்டவர்கள்.....

இவர்களின் கல்லறைகளில்
மனிதர்கள் என்று எழுதாதீர்கள்
புனிதர்கள் என்று எழுதுங்கள்!

சூ.ராஜ்குமார்
வண்ணார்பண்ணை

## இலட்சியம் வெல்லும்



இந்த மண் மாவீரர்களின்
உதிரங்கள் வடிந்த மண்
உறவுகளை விட்டு விட்டு
உயிரையே மண்ணுக்குள் ஆகுதியாக்கிய
எங்கள் உறவுகளாம்
மாவீரர்களின் புனித மண்

எங்களைக் காப்பாற்ற
ஏங்கிய உயிர்களே - இன்று
உங்கள் உயிர்கள்
மண்ணுக்குள்ளே புதைந்து கிடக்கிறதா

ஆயுதம் ஏந்தி
ஆரவாரத்துடன் சென்ற நீங்கள்
இன்று இன்பமுடன் மண்ணுக்குள்
உறங்குகிறீர்களா!

மாவீரர்களே உங்களுக்கு
நன்றி சொல்ல
என்னிடம் கண்ணீரைத் தவிர
எதுவுமே இல்லை

மாவீரர்களே நீங்கள் தெய்வங்கள்
நாங்கள் உங்கள் அடியவர்கள்
நீங்கள் எந்த இலட்சியக் கனவுகளை
சுமந்தீர்களோ! அது
நிச்சயம் நடக்கும்
சத்தியம் வெல்லும்

வதிரி த.மீனா

## சுடரேற்றி மலர்தூவி வணங்குகின்றோம்

ஆறாகப் பாய்கின்ற குருதியிலே - நின்று
போராடி அயர்கின்ற தியாகிகளே
சேறாகும் செம்மண்ணில் - நீர் உயிர்ப்பீர்
பேறாகும் தமிழீழம் உமை வாழ்த்தும்

அந்நியரிங் கெம்மண்ணைப் பறித்தெடுத்து
அவர் புரிந்த கொடுமைகளால் உள்ளம் வெந்து
ஆவேசங் கொண்டெழுந்து அவரைச் சாடி
அடிமை விலங் குடைத்தெறிந்து அமரரானீர்

பன்னரிய இம்சைகளைப் புரிந்தவரின்
பாசறையு ளூடுருவி அதிரடியால்
அவரழியத் தமிழர்களின் மானங்காத்தீர்
அர்ப்பணிப்பின் தியாகிகளே அடிபணிந்தோம்

தேசியத் தலைவனடிச் சுவட்டிலோடி
சிங்களத்துப் படைசரிக்க களத்திலாடி
வீரியத் தோடுயிரை யீந்தீர் ஒன்றாய்க்கூடி
விண்முட்டும் புகழோடு உயிர்த்தெழுந்தீர்

மெய்சிலிர்க்கும் மர்பணிப்பா லுலகை யீர்த்தீர்
வையகத்து மாந்தர்களை அதிரவைத்தீர்
வானகத்தில் வீற்றிருக்கும் தியாகிகளே
சுடரேற்றி மலர்தூவி வணங்குகின்றோம்

மாரீசன், ஊற்றுப்புலம்

## விடியலுக்காய் எரிந்தவர்கள்



சிங்கள வன்படை சிதறிய குண்டுகள்
செந்தமிழ் மண்ணில் விழலாமோ?
எங்கள் உறவுகள் இறந்து அழிந்திடும்
இனியொரு இழிநிலை எழுதாமல்
செங்கள மாடினர் சிந்தினர் குருதியும்
சோர்ந்திட வில்லை வேங்கைகளும்
தங்கள் உடல்களில்தாங்கி மடிந்தனர்
தூங்கினர் எங்கள் இதயமதில்

எத்தனை நாளிவர் இத்திரு மண்ணில்
நித்திரை மறந்து நலிந்தாரே
சத்தென வாழுடல் சோர்பசி வேகினும்
சமரிடை புகுபகை சாய்த்தாரே
சொத்தென உறவுகள் சேர்மண் காத்திட
சித்தம் கொண்டவர் சென்றாரே
இத்தரை வித்தென எரியுடல் ஒளியுறும்
விடியலில் மண்விடை கொண்டாரே

மெய்யது தந்தொரு மொய்எழுதிமலர்
பெய்தனம் கண்வளர் தாலேலோ
வையமும் வானமும் வளர்பிறை என்றுனை
வாழ்த்தி வணங்கிடும் தாலேலோ
கொய்த களங்களில் குலவிய தேகமும்
களையுற(க்) கண்வளர் தாலேலோ
தாயவள் கருவறை துயிலுறு தெய்வமே
தூங்கிடப் பாடுவம் தாலேலோ

சேரன்
த.சிவராசா

## மணி விளக்கை ஏற்றிடுவோம்



எம்மவரை காத்திடவும்
எம்மண்ணை மீட்டிடவும்
எமக்கே உரிமை உண்டு!
என எண்ணி உழைத்திடுவோம்.....
என்று உருவான

மாவீரர் தினமன்றோ!
மனதினிலே இடம்பிடித்த
மாபெரும் வீரர்களை
மகேசனாய் மதித்திடுவோம்.

நெஞ்சறைகள் நான்கு உண்டு
கல்லறைகள் பல உண்டு
கல்லறைகள் அத்தனையும்!!
நெஞ்சறையின் கோயில்களே

இருளினை அகற்றி
ஒளிதரும் பகலவன்போல
ஒளிமயமான வாழ்விற்கு
வித்திட்ட மாவீரர்
மடியவில்லை எம்
மனதிலிருந்து எப்போதும்.

மடிந்தும் மடியாத
மாவீரர் பலரிற்காய்
மங்கள நாள்தனிலே
மணி விளக்கை ஏற்றிடுவோம்.

கே. கணேசமயூறி
வண்ணார்பண்ணை

யாழ்ப்பாணம்.




# இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய சாண எரிவாயு சக்தி

நரேசா (NARESA) நிறுவன ஆய்வொன்றின்படி, இலங்கையில் அடிப்படை எரிசக்தி நுகர்வில் 70 வீதம் உயிர்ச்சுவட்டு (திணிவு) எரிசக்தி விறகுமூலமே பெறப்படுவதாகத் தெரியவருகின்றது. கிராமிய, தோட்டத்துறையில் 90 வீதம் உயிர்ச்சுவட்டுத் திணிவே எரிசக்தித் தேவையை நிறைவு செய்கின்றது. பொதுவாகச் சூழலியலாளர் குற்றம் சுமத்துவதுபோல், மேற்படி எரிபொருள் பாவனைக்காகக் காடுகள் அழிக்கப்படுவது அரிதே. அவ்வப் பிரதேசங்களில் பயிராகும் பயன்தரு தாவரங்களின் உப உற்பத்திகளே, விறகுக்காகப் பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக- பெருந்தோட்டப் பகுதிகளில் தேயிலைச் செடியின் காய்ந்த தடிகள், இறப்பர் மரத்தின் எச்சங்கள் என்பனவும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பனைமரத்தின் உப உற்பத்திகளான ஓலை, மட்டை, ஊமல் போன்றனவும்- எரிபொருளாக அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. தென்னை மரத்தின் உப உற்பத்திகள், கறுவா, கரும்புத்தடி என்பனவும் - அவை பெருமளவு காணப்படும் பிரதேசங்களில் விறகுக்காகப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

காட்டுத்தாவரங்களை விறகுக்காக உற்பத்திசெய்து, எரிபொருளாகப் பயன்படுத்தும் வழிமுறைகளும் பலநாடுகளில் பின்பற்றப்படுகின்றன. இதற்காக ஆமணக்கு, சூரிய காந்திச்செடி போன்றன பெருமளவு உதவுகின்றன. எண்ணெய்த் தாவரங்களிலிருந்து உயிரியல் டீசல் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகளும் உள்ளன. உயிரியல் தொழில்நுட்ப அறிஞர்கள் - பிரதேசரீதியாக இவை உற்பத்தி செய்யப்படும் சாத்தியம்பற்றிச் சிந்திக்கலாம்.

ஒப்பீட்டளவில் எம்மால் குறைந்த செலவில் பெறக்கூடிய சக்திவளமாக உயிர்வாயுச்சக்தி விளங்குகின்றது. பொதுவாக தாவர, மிருக, மனிதக் கழிவுகளிலிருந்து உயிர்வாயு பெறப்படலாம். இவ்வகைக் கழிவுச்சேதனப்பொருட்கள், காற்றில்லாத சூழ்நிலையில் சிலநுண் உயிர்களின் (மெதேனிக் பக்ரீறியா) தாக்கத்தினால் பிரிகையடைந்து, நொதிக்கும்போது உண்டாகும் வாயுவே உயிர்வாயு ஆகும். பொதுவாக மெதேன் வாயு என வழங்கப்படும் இவ்வாயு, ஒரு வாயுக் கலவையாகும். இதிலே மெதேன் (Methane $CH_4$) 55 - 65 வீதமும், காபனீரொட்சைட் ($CO_2$ 35 - 45 வீதமும், நைதரசன் ($N_2$) 3 வீதமும், ஐதரசன் ($H_2$), ஒட்சிசன் ($O_2$), ஐதரசன் சல்பைட் ($H_2S$) என்பன ஒவ்வொரு வீதத்திலும் அடங்கியுள்ளன.

உயிர்வாயுவை மிருகக்கழிவுகளிலிருந்து, குறிப்பாக சாணத்திலிருந்து பெற்றுக்கொள்வது எமக்குப் பொருத்தமானதாகவும், இலகுவானதாகவும் அமையும். இதனால், இவ்வாயுவைக் கிராமிய விவசாய மக்கள் சாண எரிவாயு என வழங்குகின்றனர். இந்தியாவிலும், சீனாவிலும் இதன் பயன்பாடு பழையகாலம் முதலாக இருந்து வருகின்றது. பிலிப்பைன்ஸ், கொரியா ஆகிய நாடுகளிலும் இவை குறிப்பிடத்தக்கவகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் சமையலுக்காகச் சாணவிறாட்டியைப் பயன்படுத்தும் வழக்கம் நீண்டகாலமாக இடம்பெற்று வருகிறது. விறகுத் தட்டுப்பாடே அங்கு இதனை ஊக்குவித்துள்ளது. இந்தியக் கிராமங்களில், குறிப்பாக தமிழ்நாட்டுக் கிராமங்களில் சாண எரிவாயுச் சக்திப் பயன்பாடானது- அரசினால் திட்டமிடப்பட்ட முறையில் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. பெரும்தொகையான கிராமிய மக்கள் - இதன் பாவனையால் பெருமளவு பயன்பெற்று வருகின்றார்கள். எமது கிராமிய விவசாய மக்களும், தமது அன்றாட வீட்டுத்தேவைக்கான சக்தியைச் சாண எரிவாயுவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு, சாண எரிவாயுவை உற்பத்தி செய்யக்கூடிய வழிபற்றிய தொழில்நுட்ப அறிவை அவர்களுக்கு நாம் வழங்கவேண்டும்.

பொதுவாக, எமது வீடுகளிலே ஒளி பெறுவதற்கும், சமையல் செய்வதற்குமே கூடுதலான எரிபொருள் தேவைப்படுகின்றது. எரிபொருட்களின் விலையேற்றம், விறகுப் பற்றாக்குறை என்பன தீராத பிரச்சினைகளாகத் தொடர்கின்றன. இப்பிரச்சினைக்குரிய பொருத்தமான மாற்றுவழிகளிலொன்று- கிராமந்தோறும் சாண எரிவாயுவை - வீட்டிற்கு ஒளியேற்றவும், சமையல் செய்வதற்கும் பெருமளவு பயன்படுத்தும் வழியைக் காண்பதேயாகும். சிலிண்டர்களில் நிரப்பப்பட்டு விற்பனையாகும் எல்.பி. வாயுவையே நகரப்புற மக்கள் சமையலுக்காகப் பெருமளவு பயன்படுத்தி வருகின்றார்கள். சாண எரிவாயு- எல்.பி. வாயுவுக்கு நிகரான எரிச்சக்தியை வழங்கவல்லதாகும். அத்துடன், 'பெற்றோமக்ஸ்' விளக்கை இவ்வாயுவைப் பயன்படுத்தி எரியச்செய்யமுடியும். இவைதவிர, இவ்வாயுவின் துணையுடன் இயந்திர மோட்டார்களை இயங்கச்செய்ய முடியுமாகையால் - ஒளியேற்றவும், நீர் இறைக்கவும், மின்சாரம் பெறவும் இதனைப் பயன்படுத்தமுடியும்.

சாண எரிவாயு எரியும்போது, கரிபடியாத சுவாலை வெளிவருவதால், சமையல் பாத்திரங்களில் கரிபடிவதில்லை. புகை குறைவாகையால், வளிமாசடைவதில்லை. மேலும் எரிவாயு பெற்றபின் எஞ்சும் சாணம் கூடுதலான பயிர்ப் போசணையைக் கொண்டது. இது கிருமிகள், களைகள், அற்றதாகவும் காணப்படுன்றது. இச்சாணத்தை உயரமாகப் பயன்படுத்தும்போது, விவசாய உற்பத்தி அதிகரிப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

நாம் பின்பற்றத்தக்க சாண எரிவாயு உற்பத்திச் சாதனங்கள் இருவகைப்படும்.

1. மிதக்கும் வாயுக்கொள்கலனுடன்கூடிய இந்தியமுறைச் சாதனம்.

2. அமுக்க கொள்கலனுடன்கூடிய சீனமுறைச் சாதனம்.

இந்தியமுறை 'ஹோபர்காஸ்' முறையெனவும் வழங்கப்படும். இந்தியாவில் ஏழு பேர்கொண்ட ஒரு குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய, சாணஎரிவாயுச் சாதனத்தை 20,000 ரூபா (2000 ஆண்டுக் கணிப்பீடு) செலவில் அமைததுக்கொள்ள முடியுமென்கின்றனர்.

சீனமுறையிலான எரிவாயுச்சாதனம் - இந்திய முறையை வீடச் சிக்கனமானதும், சுலபமாக அமைக்கக்கூடியதுமாகும். இந்தியச் சாண எரிவாயுச் சாதனத்தைவிட அரைப்பங்கு செலவில் இதனை அமைத்துக்கொள்ளலாம். ஆண்டுக்கு ஒருமுறை துப்பரவு, பராமரிப்புப் பணியை மேற்கொண்டால் போதுமானது.

இரண்டு அல்லது மூன்று மாடுகளிலிருந்து நாளொன்றிற்கு 15 கிலோ சாணம் பெறப்படுகின்றதெனக் கொள்வோம். இதிலிருந்து பெறப்படும் எரிவாயுவானது, ஒரு கன மீற்றராக (2.4 கன அடியாக) இருக்கும். ஒருகன மீற்றர் எரிவாயுவின் பெறுமதி பின்வருமாறு.

- 2.0 கிலோகிராம் விறகு.
- 0.6 லீற்றர் மண்ணெண்ணெய்.
- 0.5 லீற்றர் பெற்றோல்.
- 0.4 லீற்றர் டீசல்.
- 3 பேருக்கு மூன்றுவேளை சமைப்பதற்கான எரிசக்தி.
- ஒரு மணித்தியாலத்துக்கு 6 'பெற்றோமக்ஸ்' விளக்குகளை எரிவூட்டுவதற்கும் போதுமான வலு.
- ஒரு மணித்தியாலத்துக்கு 40 w ஒளிசக்திகொண்ட 25 மின்குமிழ்களை ஒளிவூட்டுவதற்குப் போதுமான வலு.

ஆகிய அனைத்திற்கும் தேவைப்படும் மொத்த சக்திக்குச் சமமானதெனக் கணிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தின் விவசாய உற்பத்தியானது - பயிர்ச்செய்கையுடனும், விலங்கு வளர்ப்புடனும் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படும் பண்புகொண்டதாகப் பாரம்பரியமாகவே இருந்து வருகின்றது.

எமது பாரம்பரியத்தில் மாடுகளை செல்வ வளங்களாகக் கொள்ளும் வழக்கம் உள்ளது. இதனால், எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கிராமிய விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றும், மாடு வளர்ப்பில் அக்கறை கொண்டுள்ளனர். பலர் பட்டிமாடுகளைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். எனவே, சாண எரிவாயுச் சக்தியை - கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் பெறச்செய்வது இலகுவாக நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டமேயாகும்.

-பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்

# உருளைக்கிழங்குச் செய்கைக்கு மாற்றீடாக செய்கை பண்ணக்கூடிய பயிர்கள்

யாழ்.மாவட்டத்தில் பெரும்போகத்தில் (ஐப்பசி - பங்குனி மாதங்களில்) யாழ்.விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடுதல் வழமையானதாகும். இப்போகத்தில் யாழ்.குடாநாட்டில் நிலவுகின்ற காலநிலைத்தன்மை சாதகமாக அமைவதனால், இந்தப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இதேகாலப்பகுதிகளில் தென் மாகாணங்களிலும், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் - தை, மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் கூடுதலான உருளைக்கிழங்கு சந்தைக்கு வருகின்றது.

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு - எமது மாவட்டத்திலேயே விற்பனை செய்யப்பட்டு, அதன்மூலம் விவசாயிகள் கணிசமான அளவு நிகர இலாபம் பெற்றுள்ளனர். ஆனால், தற்போது நடைமுறையிலுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கைளினால், தென் மாகாணத்திலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு உருளைக்கிழங்கு கொண்டுவருதலைத் தடைசெய்யமுடியாத நிலை காரணமாகவும், உருளைக்கிழங்கின் சந்தை விலையினை தீர்மானிக்கமுடியாத நிலையினாலும் - இந்தப் பெரும்போகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பிலேயே உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடுமாறு விவசாயிகளுக்கு ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மட்டுப்படுத்தப்பட்ட இந்த நிலப்பரப்பைத்தவிர, ஏனைய விளைநிலங்களில் - கீழ்வரும் பயிர்ச்செய்கை முறைகளை மேற்கொண்டு விவசாயிகள் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**அ) பீற்றூட், வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்**

எமது மாவட்டத்திற்குத் தேவையான செத்தல் மிளகாய் போதியளவு இங்கு உற்பத்தி செய்யப்படாததனால், இப்பயிர்ச்செய்கையில் கூடுதலாக ஈடுபட்டு, உற்பத்தியைப் பெருக்குவதுடன், இலாபத்தையும் பெறமுடியும்.



பீற்றூட், வெங்காயம் விளைபொருட்களுக்கும் மற்றைய மாவட்டங்களில் சந்தை வாய்ப்பு இருப்பதனால், இவற்றையும் பயிர்செய்துகொள்ளலாம்.

**ஆ) சணலை விதைத்துப் பூக்க ஆரம்பிக்கும்போது, மண்ணினுள் புதைத்து வெங்காயம், மிளகாய் போன்றவற்றைப் பயிரிடல்**

சணல் பயிர் - சேதனப்பசளையாகப் மண்னை வளமாக்குவதனால், பயிர் உற்பத்திச் செலவையும் குறைக்கின்றது. யாழ்.விவசாயிகள் மாட்டெரு, கோழியெரு போன்ற சேதனப்பசளைகளுக்கு - கூடியளவு செலவழிப்பதற்கு மாற்றீடாக, சணலையும் மற்றைய பசுந்தாட் பசளைகளையும், கூட்டெருவையும் தயாரித்துப் பாவிப்பதன்மூலம், பயிர்ச்செய்கைச் செலவைக் குறைத்துக்கொள்வதுடன், பயனையும் பெற்றுக்கொள்ளலாம்.

**இ) முந்திரிகைச் செய்கையில் ஈடுபடுதல்**

தற்போது முந்திரிகைப் பழத்திற்கு நல்ல கிராக்கி இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் 20 வருடங்களுக்கு முன்பு 280 ஹெக்ரேயர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த முந்திரிகை, இடப்பெயர்வு காரணமாகப் பாரிய வீழ்ச்சியடைந்து, இப்போது மீண்டும் புதிய நடுகைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போதுள்ள விஸ்தீரணம் 30 ஹெக்ரேயர். எனவே, முந்திரிகைச் செய்கையையும் ஒரு இலாபகரமான தொழிலாக மேற்கொண்டு, விவசாயிகள் பயனைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பயிர்ச்செய்கைகளின் மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு, தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்புகொள்ளுமாறு விவசாயிகள் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்:**
**சி.சின்னத்துரை**
**உதவி விவசாயப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சாவகச்சேரி | திருநெல்வேலி | சங்கானை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 40/= | 60/= | 70/= | 50/= | 100/= | 50/= |
| வெண்டிக்காய் | 20/= | 40/= | 30/= | 30/= | 20/= | 20/= | 25/= |
| உருளைக்கிழங்கு | 75/= | 80/= | 70/= | 80/= | 60/= | 80/= | 65/= |
| கத்தரிக்காய் | 60/= | 60/= | 60/= | 60/= | 50/= | 100/= | 50/= |
| பாகற்காய் | 60/= | 80/= | 80/= | 80/= | 80/= | 70/= | 60/= |
| கரட் | 60/= | 60/= | 70/= | 40/= | 40/= | 80/= | 50/= |
| பீற்றூட் | 20/= | 40/= | 35/= | 100/= | 30/= | 60/= | 30/= |
| முருங்கைக்காய் | 100/= | 60/= | 70/= | * | 100/= | 100/= | 80/= |
| வெங்காயம் | 35/= | 50/= | 50/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| பச்சை மிளகாய் | 35/= | 60/= | 50/= | 40/= | 40/= | 50/= | 38/= |

# எமது பிரதேசத்திலிருந்து அருகிச்செல்லும் மரமுந்திரிகைச் செய்கை

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சாதாரணமாக உச்சவிளைவு கிடைக்கும் ஓர் காலப்பகுதியில், ஓர் நாளில் ஒருவரால் சுமார் 35-40 கிலோ அளவிலான விதைகளைச் சேகரிக்கமுடியும்.

அதேவேளை, சாதாரண நிலைமையின் கீழ், ஓர் மரத்திலிருந்து 4-5 கிலோ விதைகளையும், உச்சநிலையில் பயிர்ச்செய்கை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் 10 - 14 கிலோ விதைகளையும் பெற்றுக்கொளளலாம்.

ஆனால், நடுகைக்காகத் தரமற்ற நாற்றுக்களைப் பயன்படுத்தினால் அல்லது பூக்கும் காலப்பகுதியில் தேயிலை நுளம்புப் பூச்சிப் பீடையின் தாக்கம் அதிகமாயிருந்தால் அல்லது மழைவீழ்ச்சியின் அளவில் மிகுந்த தளம்பல் ஏற்பட்டால், மேற்சொல்லப்பட்ட விளைவைப் பெறமுடியாது போகலாம்.

நாம் பெற்றுக்கொண்ட மரமுந்திரிகை விதைகளை, விற்பனைக்குரிய அதாவது பாவனைக்குகந்த பொருளாக மாற்றம் செய்யும் பதனிடல் அல்லது பதப்படுதல் பற்றி இனி ஆராய்வோம்.

இலங்கையைப் பொறுத்தவரை மனித வலுவையும், இயந்திர வலுவையும் இணைத்தே இந்த விதை பதப்படுத்தல் செய்யப்படுகின்றது. அண்ணளவாக 95% இற்கு மேற்பட்ட அளவான விதையானது- பெண்களுக்குரிய கைத்தொழில் செயன்முறையால் பதப்படுத்தப்படுகிறது. ஆனாலும், பதப்படுத்தலிற்குரிய ஆரம்பகட்டமாக- சேகரிக்கப்பட்ட விதைகளை நன்கு துப்பரவாக்கிய பின்னர், சுமார் மூன்று நாட்களுக்குச் சூரிய ஒளியில் நன்கு உலரவிட்டு, அதன் நீர்த்தன்மையைச் சுமார் 8-9 % அளவில் இருக்கத்தக்கவாறு கொண்டுவருதல் வேண்டும். நீர்தன்மை அதிகளவில் இருக்குமாயின், தொடர்ந்து பதப்படுத்தல் கடினமாக இருக்கும்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் செயன்முறைகளின்படி- சேகரிக்கப்பட்ட விதைகள் முதலில் அமுக்க அடுகலன்கொண்டு அவிக்கப்பட்டு, பின்னர் மனித வலுவினால் செயற்படுத்தப்படும் இயந்திரம்மூலம் கோதுடைக்கப்படுகின்றது. இவ்வாறு கோதுகள் உடைக்கப்பட்டு பெறப்படும் வித்திலைப் பகுதியானது (Ternas), பின்பு மின் வலுவினால் இயங்கும் வெப்ப அடுகலனில் சுமார் 3 மணித்தியாலங்களுக்குக் குறைந்த வெப்பத்தைப் பயன்படுத்தி வறுக்கப்படுகின்றது. நன்கு வறுக்கப்பட்ட வித்திலைப் பகுதியின் மேலிருக்கும் மண்ணிறத் தோற்பகுதியானது (Testa) அகற்றப்பட்டு, தரம் பிரித்தலிற்கு உட்படுத்தப்படுகிறது.

இலங்கைக்குரிய தரம் பிரிப்பில் முழுமையான வித்துக்கள், பாதியான வித்துக்கள் மற்றும் உடைந்த துண்டுகள், தூள்களென வகைப்படுத்தப்பட்டு, பொதி செய்யப்படுகின்றன. ஆனாலும், உள்ளூர் சந்தைக்காகவும், வெளியூர் சந்தைக்காகவும் இந்த வித்துக்களானது தனியாக அல்லது மிளகாய்த்தூள், கறியுப்பு கலந்த உறைப்பு வித்துக்களாயும் மேலும் தரமுயர்த்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால், எமக்கெல்லாம் தெரிந்த ஓர் பாரம்பரிய பதப்படுத்தல் முறை - நன்கு காய்ந்த விதைகளை ஓர் பெரிய இரும்புச் சட்டியில் போட்டு, மணலுடன் சேர்த்து வறுத்த பின், அவற்றை மரத்தாலான உபகரணம் கொண்டு அடித்துக் கோதுகளை அகற்றிய பின், வித்திலைகளை எடுப்பதாகும். இந்த செயன்முறையில் கோதுகளிலிருந்து வெளிவரும் திரவமானது - மனித உடலுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது. மரமுந்திரிகை விதைக் கோதானது - சுமார் 25% வீதமான அளவு சிவப்புசேர் மண்ணிற எண்ணெய் வகை திரவத்தைக் கொண்டுள்ளது. இந்த 'அக்றிட்' வகைக்குரிய பதார்த்தமானது பொருளாதாரரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததோடு, மரமுந்திரிகை உற்பத்தியில் ஓர் உபவிளைவுப் பொருளாகவும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. மரமுந்திரிகை செய்கையில் பூச்சி, பீடைகளுடன் கலந்து பூச்சிக்கொல்லியாகவும் அல்லது வெட்டுக்காயத்திற்குரிய தொற்று நீக்கியாகவும், இந்த எண்ணெய்த் திரவம் பயன்படுகிறது என்பதைவிட, இது எமது தோலில் பட்டால் எரிகாயங்களை உண்டுபண்ணக் கூடியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட 40% ஆன விதைகள் - உள்ளூர் தேவைக்காகவும், மிகுதி 60% ஆன விதைகள் - ஏற்றுமதி செய்வதற்காகப் பெரும்பொதி செய்வதற்கும் உட்படுத்துகின்றன. பதப்படுத்தப்பட்ட இலங்கை மரமுந்திரிகை வித்துக்களை இறக்குமதி செய்யும் பிரதான நாடுகளாக - கனடா, அமெரிக்கா, இஸ்ரேல், இங்கிலாந்து மற்றும் ஜப்பான் விளங்குகின்றன. இவர்கள் இலங்கை வித்துக்களை விரும்பி வாங்குவதற்கான காரணம் - இதன் உயர்ந்ததரமாகும். ஆனால், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், மரமுந்திரிகைக்கான உற்பத்திச்செலவு இலங்கையில் அதிகமாக உள்ளதாகும். இதற்குப் பிரதான காரணங்கள் உயர் வேலையாட்கூலி, குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் மரமுந்திரிகை செய்கை பற்றிய பூரண அறிவின்மை என்பனவாகும்.

ஏன் இவ்வளவு தூரம் வளர்ந்த நாடுகள் சில - இம் மரமுந்திரிகை வித்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இறக்குமதி செய்கின்றன எனப்பார்த்தால்? மரமுந்திரிகை விதைகளிலுள்ள போசணைக் கூறுகளே காரணமாகும். நிலக்கடலையுடன் ஒப்பிடும்போது, கிட்டத்தட்ட சம அளவில் பல போசணைப் பதார்த்தங்களை இம்மரமுந்திரிகை வித்துக்களும் கொண்டுள்ளன. இவை இரண்டுமே ஒப்பீட்டளவில் அதிகளவிலான எண்ணெயைக் கொண்டிருப்பதோடு புரதம், காபோவைதரேற்று மற்றும் அவசியமான பல விற்றமின்களையும், கனியுப்புக்களையும் கொண்டுள்ளன. எனவே, இந்த அளவில் சிறந்த போசணைப் பெறுமானமுள்ள இரண்டிலும் ஆண்டிற்குரிய நிலக்கடலையை விரும்பிப் பயிர்செய்யும் நாம்,



பல்லாண்டுக்குரிய பயன்தரு மரமுந்திரிகையை மறந்து விடுகின்றோம். இன்று எமது பிரதேசமே அதிகமாக மரமுந்திரிகையை மறந்து போயுள்ளது. ஆனால், தென்பகுதி இதனை வைத்து உழைக்கத் தெரிந்துள்ளது.

எங்கள் பிரதேசத்தில் நிலவும் சாதாரண கால நிலைத் தன்மை மற்றும் எங்கள் பிரதேசங்கள் உள்ளடக்கும் பயிர்ச்செய்கைக்கு எற்ற மண்வகை, பயிர்ச்செய்கை நிலம், ஆளணி வளம் போன்றவற்றோடு எமது பிரதேசம் மரமுந்திரிகைப் பயிர்செய்கை சம்பந்தமான ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தருவதற்குரிய கல்விசார் நிபுணர்களையும் கொண்டுள்ளது. அந்த வகையில் வன்னிப்பிரதேசத்தில் குறிப்பாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் இந்த மரமுந்திரிகைச் செய்கையை ஓர் பொருளாதாரப் பயிராகக் கருதி, செய்கைபண்ணவிழைவோமானால், நிச்சயம் சிறந்த பலனைப் பெறமுடியும். 50 கிராம் கஜு விதைகளை வாங்குவதற்கு ரூபா 40 அளவில் செல வழிக்கும் நாம், இதன் செய்கைபற்றி இனி யாவது சிந்தித்தல் அவசியமாகும். எதற் கெடுத்தாலும் பிறர்கையையும், தயவையும் நம்பியிராது; எமது தேசத்தின் பரிணாம வளர்ச்சியில் நாமும் பங்கெடுத்து, தேசத்தையும், எம்மையும் வளப்படுத்திக் கொள்வோம்.

**செல்வி சுமித்திரா பன்னிருகரன்**
**(பயிரியல்துறை)**
**தகவல் தொடர்பு மையம்,**
**விவசாயபீடம்.**

# முயல் வளர்ப்பும் - நன்மைகளும்

முயல்- இது அழகிற்காக வளர்க்கப்படும் ஒரு பிராணியாகவே ஆரம்பத்தில் கருதப்பட்டு, வளர்க்கப்பட்டு வந்தது. ஆனால், உணவிற்காகவும் வளர்க்கப்படக்கூடிய ஒரு பிராணியாகவே இந்த முயல் காணப்படுகின்றது.

முயல் இனங்களில் பலவகைகள் உள்ளன. பொதுவாக முயல் இனங்கள் அளவுகளிலும், நிறத்திலும், உடல், உரோம அமைப்புகளிலும் வேறுபடுகின்றன. முயலை விஞ்ஞானரீதியாக 'ஒரைக்டோ - லேகஸ் குனிகுலஸ்' என அழைப்பர்.

இந்த முயல்கள் ஆரம்பத்தில் ஐரோப்பாக் கண்டதிலேயே வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. கி.பி. 1100 ஆம் ஆண்டில், கடற் பிரயாணிகள் இறைச்சித் தேவைக்காக முயல்களைக் கொண்டுசென்றதாக அறியமுடிகிறது. ரோம் நாட்டினர் முதன்முதலாக முயல்களை வீட்டிலேயேவைத்து வளர்க்கத் தொடங்கியதாக வரலாறுகள் மூலம் அறிய முடிகின்றது.

முயல்களின் தாயகம் ஐரோப்பாவாக இருந்தாலும், கடற்பிரயாணிகள்மூலம் இறைச்சிக்காகக் கொண்டுசெல்லப்பட்ட முயல்கள் பரவவிடப்பட்டு அவுஸ்திரேலியாவிலும், நியுஸிலாந்திலும் முயல்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காமல் போக - அங்கு ஆடுகள் உண்பதற்குப் புல் கிடைக்காமல், விவசாயம் செய்யமுடியாதநிலை ஏற்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

இதிலிருந்து பார்க்கும்போது, முயல்களின் அனைத்து இனங்களும் - கிடைக்கக்கூடிய புல் வகைகளைத் தின்று, அதிகளவிலான குட்டிகளை ஈனும் சக்தி உடையனவாகவும், அதிக அயர்ச்சியையும் தாங்கக்கூடிய சக்தியைப் பெற்றுள்ள முயல்கள் - துரிதகதியில் இனப் பெருக்கமும் செய்யக்கூடியன.

எமது நாட்டிலே பெரும்பாலான மக்கள் புரதச்சத்துக் குறைவினாலும், இரத்தச் சோகை நோய்களினாலும், ஊட்டச்சத்துக்கள் இன்மையினாலும் பெரும்பாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கான முக்கிய காரணம் - இறைச்சிப் புரதத்தை உட்கொள்ளாமையே ஆகும் எனக் கூறப்படுகின்றது. இறைச்சிப் புரதத்தினை உட்கொள்ளாமையினால், உடலிற்குத் தேவையான அமினோ அமிலங்கள் கிடைக்காமற் போகின்றன.

இந்த இறைச்சிப் புரதத்தைக் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்வதற்கு - முயல் வளர்ப்பு ஒரு வரப்பிரசாதமாகும். மனிதனால் ருசித்து உட்கொள்ளமுடியாத நார்ச்சத்துப் பொருட்களைக் உட்கொண்டு, பயனுள்ள இறைச்சியாக மாற்றும் திறன் இந்த முயல்களுக்கு உள்ளதனாலும், விரைவில் இனப் பெருக்கத்திற்குத் தயாராகி, அதிகளவில் குட்டிகள் ஈனுவதால், இவை இறைச்சிக்கு ஏற்ற பிராணியாகக் காணப்படுகின்றது.

முயல்களை வளர்ப்பதன்மூலம், பல வகையான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். முயல்கள் ஒரு தடவையில் 5 இற்கும் மேற்பட்ட குட்டிகளை ஈனும் வல்லமை கொண்டவை. பெண் முயல்கள் கருத்தரித்ததும் அதனை ஆண் முயல்களிடம் இருந்து பிரித்துத் தனியாக்கி வளர்க்கவேண்டும். இதன் மூலம் அவை சிறந்த ஆரோக்கியமான குட்டிகளை ஈனும் தன்மையைக் கூடுதலாகப் பெறுகின்றன.

முயல்கள் குட்டி ஈனுவதற்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னரே, தமது உடலின் வயிற்றுப் பகுதியிலுள்ள உரோமங்களை பிய்து பாதுகாப்பான கூடுபோல் தனது உரோமத்தினாலேயே அமைக்கத்தொடங்கும். முயல் இப்படியான செயற்பாட்டில் இறங்கியதும், அது குட்டி ஈனப்போகின்றது என்பதை ஊகித்துக்கொள்ள வேண்டும். பின்னர், நீங்களும் அதற்குத் தேவையான ஒழுங்குகளைக் செய்து, குட்டிகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

குட்டி ஈன்ற பெண் முயல்களை குறைந்தது ஒரு மாதத்தின் பின்னரே மீண்டும் ஆண் முயலுடன் விடவேண்டும். அப்போது தான்





தாய் முயல் தேக ஆரோக்கியத்துடன் விளங்கும் தொடர்ச்சியாக குட்டியீனுவதனாலும் முயல்கள் பாதிக்கப்படக்கூடும்.

எனவே, முயல்கள் மூலமாக இறைச்சியும், அதன் தோலிலிருந்தும், உரோமத்திலிருந்தும் பல அழகுசாதனப் பொருட்களையும் உற்பத்திசெய்து கொள்ளலாம். உற்பத்தி செய்யப்பட்ட இவ் அழகுசாதனப் பொருட்களை நல்ல விலைக்கும் விற்பனை செய்யமுடியும். முயல்களின கழிவுப்பொருட்கள் - விவசாயத்திற்கு சிறந்த எருவாகவும் பயன்படுத்த முடியும். இதனைத்தவிர, முயல்களை வளர்த்து விற்பனை செய்து சுயவேலை வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே, இலகுவாக வளர்க்கக்கூடியதும், தோட்டங்களில் வளரும் புற்களை மட்டும் உண்டு வாழக்கூடியதுமான முயல் இனங்களை வளர்த்து, சுயதொழில் வாய்ப்பினைப் பெறுவதோடு, வீணாகிப்போகும் நேரத்தையும் மீதப்படுத்தி நற்பயன்களைப் பெறமுடியும்.

**இரா.காயத்திரி.**

# தொழில் வங்கி



| நிறுவனம் | தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் | அரசகரும மொழிகள் திணைக்களம் |
|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள் | பணிப்பாளர் | மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர். |
| அடிப்படைத் தகுதி | - வயதெல்லை 35 - 45<br>- அரச உள்ளூராட்சிப் பிரிவுகளிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதன்று.<br>- சரித்திரம், மொழிகள், மனிதவியல், சமூகவியல், சட்டம் அல்லது விஞ்ஞானத்தில் முதலாம்/இரண்டாம் வகுப்பு பட்டதாரி.<br>- சுவட்டிக்கூட நிர்வாகத்தில் ஆராய்ச்சிப் பட்டதாரி.<br>- 10 வருட சேவை அனுபவம். | - தமிழ்/சிங்களத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி.<br>- க.பொ.த. (உ/த) ஆங்கில தகைமை.<br>- நிர்வாக விடயங்களில் 5 வருட அனுபவம்.<br>- வயதெல்லை 30 - 45 அரச சேவையில் உள்ளவர்களுக்கு வயது ஏற்புடையதல்ல. |
| விண்ணப்ப முடிவு திகதி | 15.12.2003 | 10.12.2003 |

**தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.**

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி கையேற்றும் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை!

## ஜே.வி.பி., சிஹல உறுமய குற்றச்சாட்டு

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றபின்னரும் - நிலைமைகளில் எதுவித மாற்றங்களும் ஏற்படவில்லையென, ஜே.வி.பி., சிஹல உறுமய ஆகிய கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

கொழும்பில் நடைபெற்ற வெவ்வேறு கூட்டங்களிலேயே இந்தக் கட்சிகள் தமது இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில், தற்போதைய நிலைமைக்குத் தீர்வு என்ன என்ற தலைப்பில் ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா பகிரங்கச் சொற்பொழிவாற்றியபோது, பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பான தமது இந்த நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் பல மாற்றங்கள் இடம்பெறும் என்று தாம் எதிர்பார்த்ததாகவும், ஆனாலும் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை எனவும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போது, ரில்வின் சில்வா தெரிவித்தார்.

முன்னர் சர்ச்சைக்குரிய விடயமாகப் பேசப்பட்டுவந்த மணிராசகுளம் முகாம் தொடர்பாக, ஜனாதிபதி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததுடன், இப்போது யாருமே அதைப்பற்றிப் பேசுவதில்லை என்றும் ரில்வின் சில்வா அங்கு பேசும்போது மேலும் குறிப்பிட்டார்.

ஊடக அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னரும், அதிலும் எதுவித உருப்படியான மாற்றங்களும் இடம்பெறவில்லை எனவும் ரில்வின் சில்வா அங்கு குற்றம்சாட்டினார்.

இதேவேளை, கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றிய சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்தினவும் இதே குற்றச்சாட்டுக்களை அங்கு வெளியிட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதால் எதுவித பயனும் ஏற்படவில்லை என அங்கு தெரிவித்திருந்த திலக் கருணாரத்தின, மணிராசகுளம் முகாம் தொடர்பாகவும் அங்கு பிரஸ்தாபித்திருந்தார்.

படைத் தளபதிகள் பலரை அண்மையில் இடம்மாற்றிய செயலானது நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒரு நடவடிக்கை எனவும் திலக் கருணாரத்தின அங்கு பேசும்போது தெரிவித்தார்.

குறிப்பாக யாழ் குடாநாட்டு படைத்தளபதியாக இவ்வளவு காலமும் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் இடம்மாற்றத்தை அவர் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

சரத் பொன்சேகா போர்நிறுத்த காலத்திலும் யாழ். குடாநாட்டில் படையினரை உசார் நிலையில் வைத்திருந்ததுடன், தொடர்ந்து பயிற்சிகளை வழங்கி எப்போதும் அவர்களைப் போருக்குத் தயாராக வைத்திருந்ததாகக் குறிப்பிட்ட திலக் கருணாரத்ன, அத்தகைய தளபதி ஒருவரை அப்பகுதியிலிருந்து இடம்மாற்றியிருப்பது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒருநடவடிக்கை என்றும் குறிப்பிட்டார்.

எப்போதும் போருக்குத் தயாராக இருக்கக்கூடிய சரத் பொன்சேகா போன்ற ஒரு தளபதியையே யாழ் குடாநாட்டிற்குப் பொறுப்பாக நியமிக்கவேண்டும் என்றும் அவர் மேலும் அங்கு உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

## கடனை மீளளிக்கவே அதிக நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு கடந்த காலங்களில் பெற்ற கடன்களை திரும்பிச் செலுத்துவதற்காகவே, வரவு - செலவுத் திட்டத்தில் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம், நாடாளுமன்றத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் குறித்த இரண்டாவது வாசிப்பில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கேட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றவேளையில், பாதுகாப்பு அமைச்சுக்கு 5 ஆயிரத்து 208 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (01)

# தமிழீழ மாவீரர் தின எழுச்சி நிகழ்வில் 17 710 மாவீரர்கள் நினைவுகூரப்படுவர்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள 21 மாவீரர் துயிலுமில்லங்களில் இன்று பிற்பகல் 6.35 இற்கு ஏககாலத்தில் ஈகச்சுடரேற்றும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முதலாவது மாவீரரான சங்கர் வீரச்சாவடைந்த நேரத்திலேயே சுடரேற்றும் வைபவம் விடுதலைப் புலிகளால் அனுஸ்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர் தினவுரை இடம்பெறவுள்ளது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் 2002 ஆம் ஆண்டு 38 உறுப்பினர்களையும், 2003 ஆம் ஆண்டு 56 உறுப்பினர்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இழந்துள்ளனர்.

கடற்பரப்பில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்களின் போதும் மற்றும் பாம்புக்கடி, நோய், விபத்து போன்ற காரணங்களினால் இந்த இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இதேவேளை, இம்முறை யாழ் குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள கொடிகாமம், கோப்பாய், வடமராட்சி, எல்லக்குளம், தீவகம், சாட்டி, மாவீரர் துயிலுமில்லங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பொதுமக்கள் போக்குவரத்து செய்வதற்கு வசதியாக ஏ - 9 வீதியை இன்று நள்ளிரவு 12 மணிவரை திறப்பதற்கு விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

படைத்தரப்பும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் இன்று நள்ளிரவு 12 மணி வரை ஏ - 9 வீதி திறக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

## சுதந்திரக் கட்சியுடனான கூட்டணி உடன்படிக்கையின்மூலம் நாடு புதியபாதைக்குச் செல்லுமாம்

### ரில்வின் சில்வா கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி உடன்படிக்கையை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை புதியபாதை ஒன்றுக்குக் கொண்டுசெல்ல முடியுமென்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, இந்தக் கூட்டணி தேசிய அரசு ஒன்றை அமைப்பது பற்றிய சிந்தனையை வலுப்படுத்தியிருக்கிறது.

கூட்டணி அமைப்பது தொடர்பாக விட்டுக்கொடுப்புடன் செயற்பட ஜே.வி.பி. தயாராகவுள்ளது.

தேசிய அரசு அமைப்பதற்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இது நாட்டை அபிவிருத்தி செய்யப்பயன்படுவதாக இருந்தால், அது நல்லதே, என்று மேலும் அவர் குறிப்பிட்டார். (01)





நேற்றுமுன்தினம் மாவீரர் எழுச்சிநாளில் தரவை துயிலுமில்லத்தில் தேசியக் கொடியை மூத்த தளபதி கேணல் கருணா ஏற்றுவதை முதல் படத்திலும், எல்லங்குளம் துயிலுமில்லத்தில் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா தேசியக் கொடியேற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தற்போதைய நிலையில் தேசிய அரசு அமைக்கும் முயற்சி தேவையற்றது!

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தற்போதிருக்கும் நிலையில் - தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் தேவையற்றது என அமைச்சரவைப் பேச்சாளரும், நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்காக விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கருத்துவெளியிட்டுள்ளார்.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சி என்பது, பொது ஜன ஐக்கிய முன்னணியினருக்கு சில அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கும் ஒரு முயற்சியாகவே இருகக்கும்.

இது அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், மக்களுக்கு தேவையற்ற சுமைகளையே ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டார்.

உண்மையில் இப்போது தேவையானது, முக்கிய பிரச்சினைகள் குறித்த முடிவுகளை எடுப்பதில் ஒரு பொது இணக்கப்பாடு எட்டப்பட வேண்டியதே.

சமாதான முயற்சிகள் பற்றி அங்கு அவர் பிரஸ்தாபித்தபோது, சமாதான முயற்சிகள் தொடர்பாக இப்போது ஒரு குழப்பமான நிலை காணப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய அதிகாரங்கள் தமக்கு வழங்கப்பட்டாலே தன்னால் சமாதான முயற்சிகளைத் தொடரமுடியும் என்று பிரதமர் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த அடிப்படையிலேயே போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது என்பதையும் அவர் தனது உரையில் மேலும் சுட்டிக்காட்டினார். (01)

# ஐ.தே.க, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடன் இணக்கங்கள் ஏற்படுத்த முயற்சிக்கிறேன்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

தேசிய நலன்கருதி ஐக்கிய தேசிய முன்னணியுடனும், மக்கள் விடுதலை முன்னணியுடனும் இணக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தேசிய நலன்கருதி ஐக்கிய தேசியக்கட்சியுடனும், அதனுடன் இணைந்துள்ள சிறிய கட்சிகளுடனும் இணைந்து செயற்பட வேண்டியதாகவுள்ளது.

அதேவேளை, நீண்டகாலத் தேவையின் அடிப்படையில் மக்கள் விடுதலை முன்னணியுடன் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டிய தேவையும் இருப்பதால், இதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளேன்.

மக்களின் நலனுக்கான செயற்பாடுகளே, எனது பிரதான நோக்கம். அதற்கு எனது கட்சி உறுப்பினர்களாகிய தங்களது ஒத்துழைப்பு என்றும் உண்டென்பது எனக்குத் தெரியும்.

தொடர்ந்தும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும். அதில் அனைவரும் நம்பிக்கை கொள்ள வேண்டும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (01)

# அடக்குமுறைக்கு அடிபணியாது மாவீரரை நினைவு கூருவோம்

## யாழ்.மாவட்ட அரசியல்துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ அடக்குமுறைகளுக்கு அடிபணியாது, மாவீரர்தின நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்குமாறு - யாழ். மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். இது தொடர்பாக அரசியல்துறையினர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இராணுவ அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் என்பன தமிழினத்திற்குப் புதிய விடயங்களல்ல. 1972 ஆம் ஆண்டுக்கு முன்னரே ஆயுதங்களைக்கொண்டு, தமிழ்மக்களை அடக்கமுனைந்தார்கள். சிங்கள அரசுகள் நினைப்பதையே தமிழ்மக்கள் செய்யவேண்டுமென எண்ணினார்கள்.

ஆனால், ஆயுதங்கொண்டு அடக்க நினைத்தவர்களை - தமிழ்மக்கள் ஆயுதங்கொண்டு அடக்கியது மட்டுமல்லாமல், வெற்றியும் பெற்றார்கள். முப்பதுவருட போராட்டம் இதற்குச் சான்றுபகரும். எனவே, இராணுவ அடக்குமுறை என்பது - எமது மக்களைப் பொறுத்தவரையில் சாதாரண விடயமாகும்.

மாவீரர்களின் நிகழ்வுகளைக் குழப்ப முயற்சிப்பது, ஜனநாயகத்தின் மீதான அடிப்படையை மீறும் செயலாகும். இந்தவேளையில், மக்கள் விழிப்பாக இருந்து, தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். மாவீரர் துயிலுமில்லங்களை நோக்கி அணிதிரண்டு, தமது அஞ்சலியைச் செலுத்தவேண்டும். இதன்மூலமாக இராணுவ அடக்குமுறைக்கு நல்லபாடம் புகட்ட வேண்டும்.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வன்னி துயிலுமில்லங்களுக்குச் செல்ல விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து வன்னிப்பகுதியிலுள்ள துயிலுமில்லங்களுக்குச் செல்லவுள்ள மாவீரரின் பெற்றோர்களுக்கு, வாகனவசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மாவீரர்களின் பெற்றோர்கள் தமக்கு அருகிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

கோட்டரீதியாக வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும், நாளை காலை 8 மணிக்கு வாகனங்கள் புறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குரிய தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக மதுபானம் விற்றவர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தோர் - அண்மையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்த மதுபானமும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறு சட்டவிரோதமாக விற்பனை செய்தோரைப் பொலிஸார் கைதுசெய்து, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தண்டப்பணமும் செலுத்தச் செய்தனர். பலர் மீது இவ்வாறு சட்டநடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், தொடர்ந்தும் சட்டவிரோத விற்பனை தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இது தொடர்பாக இவ்வாறான விற்பனையாளர்களை இனங்கண்டு, அவர்கள் அனைவருக்கும் சட்டவிரோத மதுவிற்பனையை நிறுத்துமாறு, அறிவுறுததியும், தொடர்ந்தும் விற்பனை நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. (113)

# சமூக அபிவிருத்தி மன்றத்தால் விவசாய உபகரணம் அன்பளிப்பு

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் - விவசாயிகளுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

கடந்த வாரம் சண்டிலிப்பாய், நல்லூர், தெல்லிப்பளை, கோப்பாய் ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் விவசாயிகளுக்கான விசேட கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

அவர்களுக்கு மண்வெட்டி, குப்பைவாரி முதலான சில விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கான விவசாயக்கருத்தரங்கு மற்றும் விவசாய உபகரணம் வழங்கும் நிகழ்வும், அடுத்த வாரமளவில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மன்றத்தின் ஏற்பாட்டில் 40 பேர் வரையில் தையல் பயிற்சி பெற்றுவருகின்றனர்.

ஏழாலை பாரதி சமூக அபிவிருத்தி சேமிப்பு கழகம், யாழ்.சமூக அபிவிருத்தி மன்றப் பயிற்சிக்கூடம், தெல்லிப்பளை பத்தனை கிராமம் முதலான இடங்களிலேயே இந்தப் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

## மானிப்பாய் லியோ கழகம்

# நெடுந்தீவு பிரதேசத்தில் உதவிச் செயற்பாடுகள்

மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தினருடன், வைத்தியர் குழு, மருத்துவபீட மாணவர்கள், கண்பரிசோதனை நிபுணர்கள், சுகாதார பரிசோதகர்கள், ஆசிரியர் குழுவினர் என ஒரு தொகுதியினர் - நெடுந்தீவு பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நான்கு நாட்கள் உதவிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த உதவித்திட்டங்கள் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் யாவும் நெடுந்தீவு மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களது உதவிச் செயற்பாடுகளாக -

கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், முன்பள்ளி மாணவர்களுக்குமான நிறையுணவு வழங்கல் - விளையாட்டு நிகழ்வுகளும், போட்டிகளும் - சிறுவர் உரிமையும், பாதுகாப்பும்- சுகாதாரம் தொடர்பான கருத்தரங்கு - இலவச பற்பசை, பற்தூரிகை வழங்கல் - சிரமதானம் (பாடசாலை, அரசநிறுவனம்) - பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள், புத்தகங்கள் வழங்கல் - மருத்துவ முகாம், மருத்துவப் பரிசோதனை மருந்து வழங்கல் - கண்பரிசோதனை, இலவச கண்ணாடி வழங்கல் - க.பொ.த. (சா/தா) மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கும், இலவசக் கையேடு வழங்கல்.

இவ்வாறான உதவிச்செயற்பாடுகளுடன், கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்த நான்கு நாள் உதவித்திட்ட செயற்பாடுகளை - மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் முன்நின்று செயற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## மானிப்பாயிலுள்ள இலங்கை வங்கி கணினி மயம்

(சுதுமலை)

மானிப்பாய் - இலங்கை வங்கிக்கிளையின் பணிகள் அனைத்தும் - கணினி மயப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தவகையில், மானிப்பாய் - இலங்கை வங்கியானது, வெகுவிரைவாக அதன் உள்கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருவதுடன், உள்ளக கட்ட வேலைகளிலும் மாற்றங்கள் மிக விரைவாக மேற்கொள்ளப்படுகிறது. ஜனவரி மாதம் முதல் தமது கணினி சேவைகள்மூலம், புதிய வங்கிச் சேவையினை ஆரம்பிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (44)

## நேர்முகத்தேர்வுக்கு அழைப்பு

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்குப் புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு, அடுத்த மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகத்தேர்வு - யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலேயே இடம்பெறவுள்ளது.

சகல பாடநெறிகளுக்கும் விண்ணப்பங்களை அனுப்பிய மாணவர்கள், தமக்குரிய தகைமைச் சான்றிதழுடன் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுமாறு, தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் கேட்டுள்ளார்.(ப)

## உலர் உணவுக்கான வழங்கல் கட்டளைகள்

யாழ்.மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு, ஒக்ரோபர் மாதத்திற்குரிய இலவச நிவாரண விநியோகத்திற்கான உலர் உணவு பொருட்களின் ஒதுக்கீட்டிற்குரிய வழங்கற் கட்டளைகள் - யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இன்று வழங்கப்படும்.

ப.நோ.கூ. சங்கங்கள் - 2003 ஓகஸ்ட் மாதத்திற்கான விநியோகத்திற்குரிய முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்து அல்லது பிரதேசசெயலருக்கு ஒப்படைத்த முன்னேற்ற அறிக்கையின் பிரதியை, யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியில் ஒப்படைத்து, தங்களுக்குரிய ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வவுனியாவில் கைப்பணிக் கண்காட்சி

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மாகாண மட்டக் கண்காட்சியென்று இந்த மாதம் 29 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

இங்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பல கிராம மட்ட கைப்பணிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களில், பல்வேறு மனையியல்பொருட்கள் மற்றும் கைப்பணிப் பொருட்கள் என்பன இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 50 பேர் இந்தக் கண்காட்சியில் கலந்துகொள்ளும்பொருட்டு, இன்று வவுனியாவுக்குச் செல்லவுள்ளார்கள்.

## வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : எஸ்.நிகேதினி
முகவரி : 89/2, பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை.

ஐந்தாவது அகவையில்



பெயர் : த.மதுசூதனன்
முகவரி : 'அமிர்தனை', பொலிகண்டி.



பெயர் : ச.கோவர்த்தன்
முகவரி : அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி :----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்

# நெடுந்தீவில் இன்று மாவீரர் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் மாவீரர் தின நிகழ்வுகள் - இன்று மாலை 6 மணி தொடககம் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயத்தில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

என்றும் இல்லாத வகையில் இந்த வருடம் மாவீரர் வாரம் நெடுந்தீவில் பெரும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. பிரதான வீதியின் இரு மருங்கிலும் - சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன், மாவீரர் தின பதாதைகளும் கட்டப்பட்டுள்ளது. அரச அலுவலகங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் எங்கும் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன், தீவெங்கும் மக்கள் குடியிருப்புக்களின் சந்திகளிலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மக்கள் போராட்டத்தின் மத்தியிலும் வெகுசிறப்பாக நடைபெற்றாலும், இந்த வருடம் மக்கள் அனைவரும் உணர்வெழுச்சியுடன் முன்னின்று செயற்படுவது குறிப்பிடத்தக்கது. (113)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றியவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்தனர்

மக்கள் குடியிருப்பு பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய ஒருவர் - பொது மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு, விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அரியாலைப் பகுதியில் நடைபெற்றது. அதிகாலைவேளையில் உழவு இயந்திரம் ஒன்றிலும், லான்ட்மாஸ்டர் ஒன்றிலும் மணல் ஏற்றும் பணியில் சிலர் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகவும், இதனை அவதானித்த இந்தப் பகுதி மக்கள் - மணல் ஏற்றியோரைப் பிடிப்பதற்காக சென்றவேளை, உழவு இயந்திரத்தின் சாரதி தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

நேற்று மாலைவரை குறித்த உழவு இயந்திரம் மீட்கப்படாமல் இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை, மணலுடன் கைது செய்யப்பட்ட லான்ட்மாஸ்டர் சாரதியால் ஏற்றப்பட்ட மணல் - கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல புனரமைப்புப் பணிக்காக வழங்கப்பட்டது. மக்களால் பிடிக்கப்பட்ட லானட்மாஸ்டர் சாரதி, எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
மாவீரர்கள் காலத்தால் அழியாத சிரஞ்சீவிகள்.
வே.பிரபாகரன்

## நமது நோக்கு

### மண்ணின் மைந்தர்களான மாவீரர் நினைவாக...

இன்று கார்த்திகை 27.

மனிதப் புனிதர்களின் நாள்.

மானுட தியாகத்தின், மானுட மேன்மையின், மானுட வீரத்தின் அடையாளங்களாகத் தம்மை நிலைநிறுத்தியோரின் மகத்தான நாள். வரலாற்றை உருவாக்க, வரலாறாய் ஆனவர்களின் வழித்தடங்களில் ஒளிச்சுடரேற்றி, மெய்சிலிர்த்து உயிருருக உணர்வெழுச்சிகொண்டு பூரித்து நிற்கும் நாள்.

தம்நாடு, தம் மக்கள், தமது மொழியென்று ஆத்மாவின் ராகங்களை விடுதலைப் பாடலாக இசைத்தோரின் சுதந்திர தாகத்தின் அர்த்தத்தினை உலகம் உணரும் நாள்.

அவர்களும் மனிதர்கள் தான். ஆனால், அசாதாரணமானவர்கள். அதனால்தான் அதிஉன்னத இலட்சியம் ஒன்றுக்காக, அவர்கள் தம் உயரிய உயிரையே தியாகம் செய்யமுன்வந்தார்கள். அந்த இலட்சியம் கூட சுய நலத்தை இலக்காகக் கொண்டதல்ல...

மாறாக - தம் தேசத்தை, தேசத்தின் மக்களை, தேசத்தின் எதிர்கால விடிவை இலட்சியமாகக்கொண்டது.

அதனால் தான், எவராலும் அலட்சியம் செய்ய முடியாத மனிதர்களாக அவர்களை நாம் அடையாளப்படுத்திக் கொண்டோம்.

இது நமது மண்ணுக்கும், மக்களுக்கும் பெருமை தரும் விடயம். இனவாதத் தீக்கு எம்மினம் இரையாகாமல், தம் இனஉணர்வுத் தீயால் எதிரியைப் பொசுக்கியவர்கள்.

அவர்கள் தமக்கு விலாசத்தைத் தேடியதில்லை தம் தேசத்திற்கு ஒரு புதிய விலாசத்தை உருவாக்கவே முயன்றார்கள். அதனால் அவர்களின் விலாசம் தமிழ்மக்களின் இதயங்களாயிற்று.

அவர்கள் வெங்களத்தில் தம் உயிரை விடுத்தபோதெல்லாம், அவர்களின் தேசம் பகைவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுக்கொண்டேபோயிற்று.

அவர்களின் இறுதி மூச்சும், தாய் மண்ணின் விடுதலைக்கான உறுதி மூச்சாகவே வெளியேறியிருக்கும்.

அந்த, அவர்களின், மூச்சுத்தான் தமிழர் தாயகபூமியின் இதயத்துடிப்பின் ஜீவ ஓசையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஜீவ ஒலியை உற்றுக்கேட்டால், அந்த மாவீரர்களின் ஆத்மா இசைக்கும் சுதந்திர கீதத்தை உணரமுடியும்.

அவர்கள் விழுந்தபோதும் கூட, வீரவித்தாகவே வீழ்ந்தார்கள். அதனால்தான், தான் எரிந்த சாம்பலிலிருந்து மீண்டும் உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போல் புதிய புதிய போராளிகளில் சுதந்திர உயிர்ப்பினைப் பெற்றார்கள்.

"விழவிழ எழுவோம், விழவிழ எழுவோம்.

ஒன்றுவிழ நாங்கள் ஒன்பதாய் எழுவோம்" என்ற உணர்ச்சிக் கவிஞனின் பாடல் வரிகளுக்கு உயிர் கொடுத்தார்கள்.

நின்ற பகையை ஓடவைத்தும், வந்த பகையை வழிமாறவைத்தும் வரலாறு படைத்தார்கள்.

எம்மை நிமிரவைத்துக்கொண்டே, அவர்கள் வீழ்ந்தார்கள். அவர்களின் சுவடுகள் தொடரப்பட்டுக்கொண்டே இருக்கிறது. தமிழ் மக்கள் தன்மானத்துடன், தம் உரிமைகள் அனைத்தையும் வென்று, தமது தாயக மண்ணில் அச்சமின்றி சுதந்திரமாக வாழும்நிலை வரும்வரை அது தொடரவே செய்யும்.

அதுவே அவர்களின் தாகம்.

அவலத்தைத் தருபவர்களுக்கே அதனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையில் உறுதி கொண்டு நின்றவர்கள் அவர்கள். அதனால் அவர்களின் தாகம் இன்று மெல்ல மெல்லக் கனிந்துவருகிறது. தள்ளாடும் சமாதானச் சூழலிலும், நாம் கம்பீரமாக நிற்கிறோம் என்றால், அது அவர்களின் ஆத்ம பலத்தின் அடித்தளத்தால் தான்.

காற்றறியும் அவர் பெருமை.

தீயறியும் அவர் வலிமை.

ஆற்றல்மிகு அலையடிக்கும் ஆழிக்கும் அது புரியும்.

மண்ணில் விதையான மாவீரர் நாள் தன்னில், ஒளியேற்றி மலர்தூவி, கண்ணீரைப் பன்னீராய்ச் சொரியும் நாள் இன்றாகும்.

நாம் உங்கள் நினைவை மட்டுமல்ல. கனவையும் சுமக்கின்றோம். உங்கள் சுவடுகளில் எங்களின் பாதங்கள் உறுதியாகப் பதிந்தவண்ணமே உள்ளது.

அந்நியரால் உடைக்கப்படுவது உங்கள் கல்லறைகள் மட்டுந்தான். உங்கள் கனவுகளும், இலட்சியங்களும் அல்ல....

இங்கே நின்று நாமேற்றும் சுடர், உங்கள் ஆத்மாவில் கனலும் சுதந்திர நெருப்பின் பொறிகொண்டே ஏற்றப்படுகிறது.

இவைகள்தான் இன்று, துயிலும் இல்லங்களில் விடுதலைக் கனவுடன், சுதந்திர வேட்கையுடன் தங்கள் மக்கள் மீதான நம்பிக்கையுடன் அமைதிகொண்டிருக்கும் மாவீரத் திலகங்களுக்கு தமிழ்மக்கள் அளிக்கும் சத்தியமொழிகளாக இருக்கும்.

## நாடும் நடப்பும்



செய்தி:- இராணுவத் தடைகள், கெடுபிடிகள், அச்சுறுத்தல்களை மீறி மாவீரர்நாள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.

### விசேட அதிரடிப்படையால் மூடப்பட்ட

# அம்பாறை—சாகாமம் வீதி மக்களின் பாவனைக்கு!

கடந்த 13 வருடங்களாக விசேட அதிரடிப்படையினரால் மூடப்பட்டிருந்த அம்பாறை - சாகாமம் வீதி, நேற்றுமுன்தினம் மக்களின் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு நடந்த இந்தப் பாதை திறப்பு நிகழ்வில், அம்பாறை மாவட்ட விசேட அதிரடிப் படை அதிகாரி உபுல் செனவிரத்ன, விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் குயிலின்பன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு ஆகியோர் கலந்துகொண்டனர்.

1990 ஆம் ஆண்டு விசேட அதிரடிப்படையினர் - சாகாமம் வீதியிலிருந்த நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டடத்தினை ஆக்கிரமித்து, முகாம் அமைத்த பின்னர், இந்தப் பாதை தடைசெய்யப்பட்டிருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் இடையே மாதாந்தம் நடைபெறும் சந்திப்புக்களில் - பொதுமக்கள் சுமுகமான போக்குவரத்தை மேற்கொள்ள இந்த வீதியைத் திறக்குமாறு, விடுதலைப் புலிகள் - விசேட அதிரடிப்படையினரை வலியுறுத்தி வந்தனர். இதன் ஒரு கட்டமாகவே, இந்த வீதி நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. இந்த வீதி திறப்பில் கலந்துகொண்ட மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் குயிலின்பன் கருத்துத் தெரிவிக்கையில் - தற்போது மாவீரர் தினம் நடைபெறும் நேரததில் வீதி திறக்கப்பட்டமையை, தான் வரவேற்பதாகத் தொிவித்தார். இந்த வீதி திறப்பினால், பொத்துவில் மக்களும் அந்தப்பகுதி விவசாயிகளும் பெருமளவு நன்மையடைந்துள்ளனர். (07)

## வருடாந்த விளையாட்டுப் போட்டி இந்தவருடம் நடைபெறமாட்டாது

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், இந்த வருடம் நடத்தப்படவிருந்த விளையாட்டுப்போட்டி - நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1986 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 16 வருடங்கள் இந்தத் தேசிய விளையாட்டுப் போட்டியை - தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் நடத்திவந்தனர்.

இந்த விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்குரிய நிதி கிடைக்காமையினாலேயே, இது நடத்தப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய விளையாட்டுப் போட்டியில், சுமார் இரண்டு இலட்சம் போட்டியாளர்கள் - பிரதேச செயலர்ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் கலந்துகொள்ள இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த தேசிய விளையாட்டு விழாவிற்கு, 2.5 மில்லியன் ரூபா செலவாகுமென, ஏற்கனவே மதிப்பிடப் பட்டும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கியூடெக் ஏற்பாட்டில்

## மூவின மாணவர்களும் கல்விச் சுற்றுலாவில்!

யாழ். மாவட்ட மாணவர்கள் உள்ளிட்ட, மூவின மாணவர்களின் கல்விச் சுற்றுலாவும், ஒன்றுகூடல் நிகழ்வும் நாளை முதல் டிசம்பர் 2 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வலிகாமம், தீவகம் ஆகிய வலயங்களிலுள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களில், 85 பேர் இந்தக் கல்விச் சுற்றுலாவில் பங்குகொள்ளவுள்ளனர்.

குருநாகல் - குளியாப்பிட்டிய, சென். ஆன்ஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் பங்குகொண்டு, சமாதான சகவாழ்வு தொடர்பான கருத்துப் பகிர்வினை மேற்கொள்வதன்மூலம் இன, மத புரிந்துணர்வை ஏற்படுத்தவுள்ளனர். இந்த நிகழ்வுக்கான ஏற்பாட்டினை - கியூடெக் நிறுவன சமாதான நிகழ்ச்சித்திட்டப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (91)

## அரசின் வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படவேண்டும்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சுதந்திரதொழிற்கட்சி உறுப்பினர்கள் குழு அரசின் வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான எந்தவிதவிமோசனமும் இல்லாதகாரணத்தால் அவர்களுக்கான சலுகைகள்வழங்குமாறு கோரவுள்ளதாக தெரிவித்துள்ளது.

தலைமை அலுவலகத்தில்கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், அதன் செயலாளரான லெஸ்லி தேவேந்திரா தெரிவிக்கையில்,அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் மூலம் குறைந்தளவிலான முதலீட்டாளர்களே இலாபமடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தவரவுசெலவுத் திட்டம் மூலம் ஓய்வூதியக்காரர்கள் மட்டுமே கவனத்திலெடுக்கப்பட்டுள்ளதாக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# மாவீரர் அலங்கார வளைவுகளை படையினர் மீண்டும் அகற்றினர்

(மன்னார்)

மன்னார் நகரில் அமைக்கப்பட்ட மாவீரர்தின அலங்கார வளைவுகள் மற்றும் மாவீரர்களின் திருவுருவப்படம் என்பன இராணுவத்தினரால் மீண்டும் அகற்றப்பட்டது.

மன்னார் நகரிலுள்ள பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையாக இருந்த மாவீரர் தின அலங்கார வளைவுகளே நேற்றுமுன்தினம் கண் காணிப்புக்குழு உறுப்பினர் முன்னிலையில் இராணுவத்தினரால் அகற்றப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மன்னார் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இதைத் தொடர்ந்து - மன்னார் ஆயர் தலையிட்டதையடுத்து சுமூகமான நிலைக்குத் திரும்பியது.

மாலை 5.30 மணியளவில் மன்னார் வாழ்வோதய கேட்போர்கூடத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் எரிக், மன்னார் பொலிஸ் அதிபர் சாந்தகொட உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதனை தவிர்ப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது எனத் தெரியவருகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இதேயிடத்திலுள்ள அலங்காரவளைவுகள் - படையினரால் அகற்றப்பட்டபோது, மக்களின் எதிர்ப்பையடுத்து மீண்டும் அதேயிடத்தில் இராணுவத்தினரால் வளைவுகள் வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (201)

# தேசிய அரசாங்கம் உருவானால் தீர்வுக்கான சாத்தியம் பிறக்குமா?



சமாதான முயற்சிகள் தொடர்பான ஒருமித்த நிலைப்பாட்டைக் கொண்ட தேசிய முன்னணி ஒன்றே சர்ச்சையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி என தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா



தெரிவித்தார்.

சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இம் மாதம் நான்காம் திகதி, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை கையேற்றபின்னர் எழுந்த அரசியல் சர்ச்சை இன்னமும் ஒரு தீர்வின்றித் தொடர்ந்துவருகிறது.

இந்தச் சர்ச்சைக்கு ஒரு தீர்வு காணும் வகையில், ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இரண்டு தடவைகள் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ள போதிலும், இந்தப் பேச்சுக்களால் - தற்போது தோன்றியுள்ள இந்த அதிகாரச் சர்ச்சைக்கு, ஒரு முடிவு காணப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தச் சந்திப்புக்கள் மிகவும் சுமூகமானமுறையில் நடைபெற்றதாகவும், எதிர்காலத்தில் இருவரும் இணைந்து செயற்படும் வகையில் ஒரு குழுவொன்றை அமைப்பது தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனாலும், இந்த இணக்கப்பாடு தற்போது நிலவும் சர்ச்சைக்கு ஒரு தீர்வாக அமைந்துள்ளதா என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.

இருதரப்பும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ள போதிலும், சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பேற்று நடாத்தவேண்டும் எனவும், தமது அரசாங்கம் தொடர்ந்தும் அதற்குரிய ஆதரவை வழங்கிவரும் எனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - மீண்டும் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தெரிவித்திருக்கின்றார்.

இது, பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு தம்வசம் இல்லாதநிலையில், தம்மால் சமாதான முயற்சிகளைத் தொடரமுடியாது என்கின்ற அவரது பழைய நிலைப்பாட்டையே இன்னமும் அவர் கொண்டிருப்பதையே காட்டுவதாக அமைந்துள்ளது.

தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடு இவ்வாறு நீடித்தவண்ணம் இருக்க, பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையே ஒரு கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள், ஓரளவு வெற்றிகண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது, தமக்கு ஆதரவான கட்சிகளை இணைத்துக்கொண்டு, நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதே ஜனாதிபதி சந்திரிகாவின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்ற ஒரு தரப்பு வாதங்க்ளையே நிருபிப்பதுபோல அமைந்துள்ளது.

இந்தநிலையில், தற்போது தென்னிலங்கையில் நிலவும் இந்தச் சர்ச்சையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து, பலரும் பல்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா, தற்போதைய சூழ்நிலையில், இந்தச் சமாதான முயற்சிகளைப் பாதுகாக்கக் கூடியவிதமான தேசிய முன்னணி ஒன்று அமைக்கப்படுவது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே காணப்படும் முரண்பாட்டுக்குத் தீர்வுகாணப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு தொடர்பான சர்ச்சையைத் தீர்ப்பதற்கு, பிரெஞ்சு வழிமுறையைப் பின்பற்றுவது பொருத்தமானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரான்ஸ் முறைமைப்படி, ஜனாதிபதியின் தலைமையில் பாதுகாப்பு ஆணைக்குழு ஒன்று இயங்கும். இந்த ஆணைக்குழுவில் அரசாங்கத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அமைச்சர் இருப்பார். பாதுகாப்பு அமைச்சரே படையினரின் அன்றாடப் பணிகளுக்கும், படை நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகவும் இருப்பார்.

பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில், தற்போது முரண்பட்டுக் கொண்டிருக்கும் தென்னி லங்கையின் இருதரப்பும் இணைந்து ஒரு தேசிய முன்னணி ஒன்றை அமைத்து அதன் பிரகாரம் எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்கின்ற அடிப்படையில், இத்தகைய ஏற்பாடு ஒன்றுக்கு அரசாங்கமும், ஜனாதிபதியும் இணங்கிவருவதே பொருத்தமான ஒரேவழி என்று வலியுறுத்துகிறார் ஜெஹான் பெரேரா.

ஆனாலும், தான் குறிப்பிடுவது ஒரு தேசிய அரசாங்கத்தை அல்ல என்றும் அவர் தெளிவுபடுத்துகிறார்.

தற்போது பேசப்பட்டுவருவது போன்ற தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது என்பது சிக்கல் வாய்ந்த ஒன்று என்று குறிப்பிடும் அவர், அப்படி ஒன்றை உருவாக்குவதானால், அதில் அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டியது உட்பட பல்வேறு சிக்கல்கள் உள்ளன என்றும், அது தற்போதைய சூழ்நிலையில் சிரமமான ஒரு காரியம் என்றும் குறிப்பிடுகிறார் அவர்.

ஜெஹான் பெரேரா குறிப்பிடும் தேசிய முன்னணி என்பது, சமாதான முயற்சிகள் தொடர்பில் கொள்கையளவில் முடிவுகளை கலந்தாலோசித்து எடுக்கும் ஒரு அமைப்பே.

பொருளாதாரக் கொள்கைகள், மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக அரசாங்கமும், எதிர்க்கட்சியும் மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தாலும், சமாதான முயற்சிகள் விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் ஒருமித்துச் செயற்படும் வகையில் இந்த முன்னணி உருவாக்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகிறார் அவர். இதில் ஜனாதிபதியும் முக்கியமான பாத்திரத்தை வகிப்பார்.

இது சாத்தியமாகுமானால் சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட முடியும் என்று குறிப்பிடும் ஜெஹான் பெரேரா, ஆனாலும் அத்தகைய ஒரு இணக்கப்பாடு ஒன்று எட்டப்படுமா என்பதை உறுதிபடத் தெரிவிக்க முடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஜெஹான் பெரேரா குறிப்பிட்டது போன்ற கருத்துக்களையே கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் உரையாற்றும் போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகமவும் தெவித்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் தம்வசம் இல்லாமல் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாது என்று பிரதமரும், அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிசும் தெரிவித்திருப்பது குறித்து மாநாட்டில் பிரஸ்தாபித்த அமுனுகம, அதனால்தான் தற்போது தனது தலைமையிலான பாதுகாப்பு ஆணைக்குழு ஒன்றை அமைப்பது பற்றி ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதியைத் தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் பிரதமரும் ஒரு அங்கத்தவராக இணைந்து கொள்வதன்மூலம், பாதுகாப்புப் பிரிவினருக்கும், சமாதானத்தை முன்னெடுப்பவர்களுக்கும் இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தமுடியும்.

இது, பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் இல்லாமல் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாது என்கின்ற பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வாக அமைகிறது என்பதே கலாநிதி சரத் அமுனுகமவின் வாதம்.

ஆனாலும், சரத் அமுனுகம குறிப்பிட்ட பாதுகாப்பு ஆணைக்குழு, அல்லது கவுன்சில் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசனைகளிலும் பல்வேறு குழப்பங்கள் காணப்படுகின்றன.

ஜெஹான் குறிப்பிட்ட பிரான்ஸ் நாட்டின் அமைப்புக்கும், கலாநிதி அமுனுகம குறிப்பிடும் ஆணைக்குழுவுக்கும் இடையே வேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றன.

சரத் அமுனுகம குறிப்பிட்ட ஆணைக்குழுவில், அரசாங்கம் சார்பில் அங்கத்துவம் வகிக்கப்போகும் பிரதமருக்கு பாதுகாப்பு விவகாரங்களில் எந்தளவுக்கு அதிகாரங்கள் இருக்கும் என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை.

ஆனால், பாதுகாப்புத் தொடர்பான அதிகாரங்களும், சமாதான முயற்சிகளும் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் இருப்பது, சமாதான முயற்சிகளுக்கு அவசியமானது என்று வலியுறுததுகிறார் ஜெஹான் பெரேரா. சமாதான முயற்சிகளும், பாதுகாப்பு விவகாரமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துப்பார்க்கமுடியாத விடயங்கள் என்பது அவரது வாதம்.

இதற்கு உதாரணமாக அவர் சமாதான முயற்சிகளில் முக்கிய இடத்தைப் பெறுகின்ற இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றப் பிரச்சினையைக் குறிப்பிடுகிறார்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றி, அந்தப் பகுதிகளில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டுமானால், அவர்களது நிலங்களிலும், வீடுகளிலும் நிலைகொண்டுள்ள படையினர் அப்பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டியிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டும் ஜெஹான், ஆக, மீள்குடியேற்றம் தொடர்பான எந்தவொரு உரையாடலும், பாதுகாப்பு விவகாரங்களையும் உள்ளடக்கியிருக்கும் என்று குறிப்பிடுவதுடன், இத்தைகைய ஒரு நிலையில், சமாதான முயற்சிகளுக்குத் தலைமை வகிப்பவரிடம் பாதுகாப்புத் தொடர்பான அதிகாரங்கள் இருப்பது அவசியம் என்றும் வாதிடுகிறார்.

ஆனால், ஜனாதிபதி அமைக்கவுள்ளதாகக் குறிப்பிடப்படும் பாதுகாப்பு ஆணைக்குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு பாதுகாப்புத் தொடர்பான அதிகாரங்களை எந்தளவுக்கு விட்டுக்கொடுக்கும் என்பது இன்னமும் தெளிவாக வில்லை.

சமாதான முயற்சிகளை ஜனாதிபதியே முன்னெடுக்கவேண்டும் என்று, ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னரும் பிரதமர் குறிப்பிட்டிருப்பதானது, அவர் எதிர்பார்க்குமளவுக்கு அந்த அதிகாரங்களை ஜனாதிபதி அவருக்கு வழங்கத்தயாராக இல்லை என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறதா என்பதும் இன்னமும் தெளிவானதாக இல்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஒருவேளை இந்த விவகாரங்களில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் ஒரு இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் என்ன ஆகும் என்பதுபற்றியும் நாம் ஆராயவேண்டியது அவசியமாகிறது.

அவ்வாறு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே ஒரு இணக்கப்பாடு காணப்படவில்லையாயின், அல்லது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட முடியாவிட்டால், அடுத்து தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுப்பதைத் தவிர, வேறுவழியில்லை என்கிறார் ஜெஹான் பெரேரா.

(தொடரும்.....)

# தமிழ் - சிங்கள கலைக்கூடலும் சிஹல உறுமயவின் வெறியாட்டமும்

*(நேற்றை தொடர்ச்சி...)*

விடக்கூடாதென்பதற்காக, புரிந்துணர்வுடனான கலைக்கூடல்களைத் தடுப்பவர்கள், வறட்டுத்தனமான சிந்தனையுடையவர்கள். தங்களால் செய்ய முடியாததை, வேறு யாராவது செய்துவிடப் போகின்றனரே என்ற வரட்டுக் கௌரவம் பார்ப்பவர்கள்பற்றி - சிந்திக்காத, உயிர்விலைகளைப் பற்றிக் கணக்கிலெடுக்காத முட்டாள்தனமானவர்களாகவே பார்க்கவேண்டியவர்களாக உள்ளனர். ஏனென்றால், நேர்மையான பக்கங்களைப் புரிநதுணர்வுடன் பார்க்கும் நிகழ்வுகளைத் தடுப்பவர்களை, வேறு எந்த வகைக்குள்ளும் அடக்கிவிட முடியாது. கலைஞர்களையும், படைப்பாளிகளையும் புலிகளாக்கியவர்களிடம் ஒரு கேள்வி - தனிநாட்டுக்கான போராட்டத்தை எதிர்க்கிறீர்கள், சமாதானத்துடனான இடைக்கால நிர்வாகம் கோருவதையும் எதிர்க்கிறீர்கள், கலைக்கூடல் போன்றவற்றையும் எதிர்க்கிறீர்கள். அப்படியெனில், என்னசெய்யச் சொல்கிறீர்கள்? பேரினவாதிகளின் அடிவருடிகளாகவும், தமிழினம் வாழ்ந்து தொல்லைப்படுமென்றா? உலகப் போரியல் வரலாற்றைச் சரியாக மதிப்பிட்டு, விடுதலைப் போராட்டத்தையும் சரியான பார்வைக்கு உட்படுத்துபவர்கள் - விளக்கமில்லாத திரட்சிக்குள் கலபடமாட்டார்கள்.

இறுதியாக ஒரு விடயம் சிங்கள-தமிழ்க் கலைக்கூடலில், அடிதடிகளை ஏற்படுத்த வந்த சிஹல உறுமயவை - ஹிரு குழுவினர் தடுத்தார்கள். இரண்டாம் நாள் நிகழ்வைக் குழப்ப வந்தவர்களைப் பொலிஸார் தடுத்தார்கள். இவற்றைப் பார்க்கையில், காலகாலமாகத் தமிழர்மீது ஒடுக்குமுறையினை, இன அழிப்பினை மேற்கொள்ளும்போது, ஹிரு குழுவினர், பொலிஸார் போன்று தமிழரையும், அவர்களது உரிமைகளையும் பாதுகாத்து இருந்தால், ஈழவிடுதலைப் போராட்டமே தோன்றியிராது. கலைக்கூடல் நிகழ்வை நோக்குகையில், பூனையொன்றை வெளியான இடத்தில் துரத்தும்போது, தப்பியோட முயலும். அறையொன்றில் பூட்டி தடியால் தட்டநினைத்தால், உயிரைக் காக்க சீறிப்பாயும். பூனையே அப்படியென்றால், தமிழரின் உரிமையை மறுத்துப் பிரித்தாள ஆசைப்பட்டால், தமிழர் பிரிந்து செல்வதைத்தவிர வேறுவழியில்லையென்றுதானே வலியுறுத்தவேண்டியுள்ளது.

கனகரவி

# சந்திரிகாவும் ரணிலும் முதலில் அதிகாரத்தினைப் பகிர வேண்டும்

*(நேற்றைய தொடர்ச்சி....)*

தமிழ் மக்கள் ஜனநாயகமுறையில் உரிமைகேட்டு வாதாடியபோது, தமிழ் மக்களின் ஆணையைப் பெரும்பான்மை ஜனநாயகம் நிராகரித்தது.

காந்தியவழியில் சாத்வீகப் போராட்டத்தின்மூலம் உரிமை கேட்டபோது, ஆயுதப்படைகளைக்கொண்டு அடக்கி, ஒடுக்கி, தமிழ்த் தலைவர்களை, இளைஞர்களை - ஆட்சியாளர்கள் சிறைவைத்தனர்.

இதேசமயம் நாடுமுழுவதும் தமிழின அழிப்புக்காகக் காலத்துக்குக்காலம் தமிழ்மக்களுக்கு எதிராக இனக்கலகம் ஆட்சியாளரால் தூண்டிவிடப்பட்டது.

அடுத்து, தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர, வேறுவழியில்லை என்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதும், அவர்களை எதிர்கொள்வதற்குமாறாக - பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று பாராமல், கிராமம் கிராமமாகத் தமிழ்ப்பொதுமக்கள் - அரச பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். அப்பாவி இளைஞர்கள் பலர் சிறைபிடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டனர்.

அரச பயங்கரவாதத்துக்கு எதிராக, ஆயுதம் ஏந்தித் தமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்கப் போராடியவர்கள் - பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டனர்.

நாட்டின் நலன்கருதி, முதலில் போர் நிறுத்தத்துக்கு வழிகாட்டியவர்கள் விடுதலைப் புலிகளே. இதை ஏற்கமறுத்து, சமாதானத்துக்கான போர் என்று, போரைத் தொடர்ந்தவர் ஜனாதிபதி சந்திரிகாவே.

சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளுக்கு முதற்படியாக - இடைககால தன்னாதிக்கசபை அமைக்கத் திட்டவரைபைக் கொடுத்தவர்கள் விடுதலைப் புலிகள்.

இத்திட்டவரைபை வைத்துப் பேசலாமென்று ரணில் அரசு சொன்னது. சந்திரிகா மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று, அதிரடி நடவடிக்கையை எடுத்து, இதற்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டார்.

1997 இல், தான் சமர்ப்பித்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் மீதே பேச்சு என்று சந்திரிகா கூறுகிறார்.

அவரின் தேசிய நல்லிணக்க அரசு வந்தாலும், 1997 ஆம் ஆண்டு அதிகாரப் பரவலாக்கல்திட்டம்தான் சமாதானப்பேச்சாக இருக்குமென்பார்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாதிக்க வரைபுத்திட்டம் என்னவாகும்?

அடுத்தது என்ன?

சமாதானமா, பேச்சுவார்த்தையா, மீண்டும் போரா? இதன்முடிவு சந்திரிகா கையில் இருக்கிறது.

எஸ்.எம்.ஜி

# 14 முஸ்லிம்கள் கொலை வழக்கில் 12 இந்துக்களுக்கு ஆயுள்தண்டனை





(டெல்கி)

குஜராத் நீதிமன்றத்தில் 12 இந்துக்களுக்கு ஆயுள்தண்டணை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சென்ற ஆண்டு கொடசார் என்ற பிரதேசத்தில் 14 முஸ்லிம்களை கொலை செய்தது தொடர்பாக, குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தார்கள்.

59 இந்து யாத்திரிகர்களை ரயில் வண்டி ஒன்றில் வைத்து முஸ்லிம்கள் கொலை செய்ததன் எதிரொலியாகவே, 14 முஸ்லிம்கள் இந்துக்களால் கொல்லப்பட்டிருந்தார்கள். குஜராத்தில் ஏற்பட்டுள்ள கலவரங்களில் இது - ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள், குறிப்பாக முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். மனித உரிமை அமைப்புக்கள் இக்கொலைகளை கண்டித்திருந்தன.

## அல்கெய்டாவின் உள்ளூர் தலைவர் ஜேமனில் கைது

(சனா)

அல்கொய்டாவின் உள்ளூர் தலைவரான மொகமட் கமிட் அல் அகாட் ஜேமனின் தலைநகர் சனாவில் செவ்வாய்க்கிழமை பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது சரணடைந்துள்ளார்.

ஒஸாமா பின்லேடனின் அல் கொய்டாவில், தேடப்பட்ட முக்கிய நபர்களில் ஒருவராவார், இவரின் நடவடிக்கைகளை பாதுகாப்பு அதிகாரிகள் சில மாதங்களாக அவதானித்து வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும், இவரின் கைது ஜேமன் அராபியக்குடா நாடுகளில் முக்கிய நிகழ்வாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேமனி உட்பட மேற்கு நாடுகளின் முக்கிய இடங்களில் பல தாக்குதல்களை அல்கொய்டா நடத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக்தாத்தில் அமெரிக்க காரியாலயம் மீது தாக்குதல்

பாக்தாத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள அமெரிக்க நிர்வாக தலைமைக்காரியாலயத்தை நோக்கி, சதாம் ஆதரவுப்படையினர் றொக்கற் தாக்குதல்களை கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டுள்ளனர். இந்தத்தாக்குதல்களை அடுத்து தலைமைக்காரியாலயத்திலிருந்த பணியாளர்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கேட்கப்பட்டனர்.

இரு மோட்டார் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவற்றிலொன்று கட்டடத்தின் வெளிப் பகுதியில் வெடித்ததாகவும் - இரண்டாவது, பஸ் நிறுத்தும் நிலையம் ஒன்றில் விழுந்து வெடித்ததாகவும், அமெரிக்க கவசப் படையின் அதிகாரி தெரிவித்தார். இச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னிந்திய வைத்தியசாலையில் உணவு, நீர் அருந்தாமல் உயிர்வாழ்கின்றார் ரிஷி!



பலதசாப்தங்களாக உணவு,நீர் எதுவும் அருந்தாமல் உயிர் வாழும் ரிஷி, வைத்தியர்களையும், அறிஞர்களையும் ஆச்சரியத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

தென் இந்தியாவில் உள்ள வைத்தியசாலையில் கடந்த 10 நாட்களாக, பிரலால் ஜானி எனப்படும் 70 வயதுடைய ரிஷியை வைத்தியர்கள் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

கடந்த 10 நாட்களாக அவர் எதையும் உண்ணவில்லை. மேலும் சிறுநீர் வெளியேற்றுவதையும் நிறுத்தியுள்ளார். ஆனாலும் உடல், உளரீதியாக நல்ல நிலையில் இருப்பதாக வைத்திய அதிகாரி டானிஷ் தேசாய் தெரிவித்துள்ளார்.

சில வாரங்கள் உணவு எதுவும் இன்றி மனிதர்கள் உயிர்வாழ முடியும், உடலில் சேமித்து வைத்துள்ள கொழுப்புக்களையும், புரதத்தையும் பாவிக்கிறார்கள். ஆனால் நீர் எதுவும் அருந்தாமல் நான்கு நாட்களுக்கு மேல் உயிர்வாழ்வது இயலாத செயலாகும்.

## சவுதியில் தாக்குதல் மேற்கொள்ளவிருந்த இரு போராளிகள் சுட்டுக்கொலை

சவுதியின் தலைநகர் ரியாத்தில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த இரு போராளிகள், பொலிஸாரால் கொல்லப்பட்டுள்ளதாக அரசமாளிகையைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

முஸ்லிம்களின் புனித மாதமான-ரமழான் - இறுதி நாளன்று இத்தாக்குதலுககுத் திட்டமிடப்பட்டிருந்தது.

இத்தாக்குதலுக்கு திட்டமிட்டவர்களை அடையாளம் காண்பதில் பொலிசார் தீவிரமுயற்சிகள் எடுத்து வருவதாக சவுதிசெய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இருதற்கொலை குண்டு தாக்குதல்களில் சவுதியில் இதுவரை தற்கொலை குண்டுதாரி உட்பட 50 பேர் வரை கொல்லப்பட்டிருந்தார்கள்.

## இஸ்ரேலுக்கான கடன் தொகையை குறைக்க அமெரிக்கா முடிவு

இஸ்ரேலுக்கு வழங்குவதற்கு ஒப்புக்கொண்டிருந்த கடன் தொகையில் இருந்து, 290 மில்லியன்களை குறைத்துவிடுவதற்கு அமெரிக்கா



தீர்மானித்துள்ளது. மேற்குக்கரை, காஸாப் பகுதிகளில் இஸ்ரேலின் அண்மைக்கால நடவடிக்கைகளே இந்தக் கடன்தொகையைக் குறைப்பதற்குக் காரணமாக அமைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், இஸ்ரேல் எல்லைப் பகுதியில் கட்டியெழுப்பும் தடுப்புச் சுவருக்கு எதிரான ஒரு தண்டனையாகவும் இது அமைந்துள்ளது.

பலஸ்தீனப் பகுதிகளில் தடுப்புச் சுவர் எழுப்புவதற்கு ஏற்படும் செலவிற்கு சமமான தொகை இதுவாகும்.

அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தடுப்பு சுவர் அமைப்பதை நிறுத்தி, பலஸ்தீனியர்களை மனிதநேயத்துடன் நோக்கவேண்டுமென இஸ்ரேலைக் கேட்டிருந்தார்.

1991 ஆம் ஆண்டு தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியின் தந்தை ஜனாதிபதியாக பதவி வகித்தபோது இஸ்ரேலின் தடுப்புச் சுவர் அமைக்கும் காரணத்திற்காக கடன் உதவியொன்றை அவரது காலத்திலும் தடைசெய்திருந்தார்.

## ஊர்சுற்றி எழுதுவது

சூரியனைப் பார்த்து நாய் குரைத்தால் யாருக்கு நஷ்டம்? என்று சிலருடைய எழுத்துக்களையும், செயல்களையும் பார்த்துப் பேசாமல் இருந்துவிடலாம் என்று என்னைப் போல் பலரும் நினைத்துப் பேசாமலிருந்துவிடலாம்.

எல்லோரும் அப்படி இருந்து விடுவார்களா?

ஐரோப்பிய ஆணையத்தின் வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பான ஆணையர் கிறிஸ்பற்றன் கிளிநொச்சிக்குப்போய் தமிழர் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கவிருப்பதாக, பற்றனின் பயண நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததைப் பார்த்து இனவாத 'த ஐலண்ட் ஆங்கில தினசரி தனது முதல்பக்கத்தில் தலைவர் பிரபாகரன் பற்றியும், பற்றன் பற்றியும் ஓலமிட்டுக் குரைத்திருந்தது.

சில தினங்களாகவே பற்றனின் கிளிநொச்சி விஜயம் பற்றியே செய்திகளும் கடிதங்களும் வெளியிட்டு பற்றன் கிளிநொச்சி போகாமல் தடுப்பதற்கு பெரும் பகீரத்தனம் செய்து பார்த்தது. விமானப் படையினரைக் கூடச் சீண்டி விட எத்தனித்தது. கொழும்பில் பற்றன் தங்கியிருந்த ஹோட்டலுக்கு முன் சில பிக்குமார் கூடிச் சத்தமிட்டு பற்றனின் கொடும்பாவிக்கு கொள்ளி வைத்ததை தவிர வேறு எதுவும் நடக்கவில்லை.

த ஐலண்ட் முதல்பக்கத்தில் வெளியிட்ட தலையங்கத்தை துணிச்சலானது என்று பாராட்டி எழுதப்பட்ட கடிதங்களுடன், அதைக் கண்டித்து எழுதப்பட்ட கடிதங்களையும் அப்பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. இதைப் பாராட்ட வேண்டும்.

'நீரும் உமது சிங்கள இனவாத மிருகங்களால் ஒருபோதும் உண்மையை உணர்ந்து கொள்ளமுடியாது. ஏனெனில் உங்கள் மகாவம்சத்தின்படி, உங்கள் மூதாதையர்கள் சிங்கத்திலிருந்து வந்தவர்கள் என்பதால்' என்று 13 அம்சங்களைக் கொண்ட ஒரு கடிதத்தை கதிர்காமன் என்பவர் கடும் வார்த்தைகளில் எழுதியிருக்கிறார்.

'500 ஆண்டுகளாக மூன்று ஐரோப்பிய தேசங்களால் இந்த நாடு (இலங்கை) கொள்ளையடிக்கப்பட்டது, சீர்குலைக்கப்பட்டது, எங்கள் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்' என்று உங்கள் தலையங்கம் ஐரோப்பிய ஆணையத்தின் மீது குற்றம் சுமத்தியிருந்தது. கடந்த 50 ஆண்டுகளாக வடக்கு - கிழக்கில் சிங்கள ஆட்சிகளின் கீழ் தமிழ் மக்கள் பட்ட துன்பத்தை என்னவென்பது? உங்களுடைய சிங்கள பாதுகாப்பு படைகளைத் தங்கள் பிரதேசத்திலிருந்து வெளியே தூக்கிப் போடுவதற்கு அவர்களுக்கு (தமிழர்களுக்கு) உரிமை இல்லையா? என்று' 'ஒரு தமிழன்' எழுதிய ஒரு கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

'பிரபாகரன் கொலையாளி என்றால் சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா, ஜே.ஆர்., பிரேமதாஸா ஆகிய எல்லோருமே ஓயாத கொலைகாரர்கள் அல்லவா? இந்தச் சிங்களத் தலைவர்களின் கீழ் தமிழர்கள் எவ்வளவோ அனு பவித்துவிட்டார்கள். விமானக் குண்டு வீச்சுகளில் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். சிங்கள பீரங்கித்தாக் குதல்களில் தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. தமிழ் பெண்கள் சிங்கள இராணுவ வெறியர்களால் சித்திரவதை செய்யப்பட்டார்கள். மானபங்கம் செய்யப்பட்டனர். இன்றும்கூட உங்கள் இராணுவம் வடக்கிலும் - கிழக்கிலும் மனித உரிமைகளுக்கு மாறாகவே நடந்துகொள்கின்றன. ஆனாலும், அவர்கள் பெரிய இனவாதிகளாதலால் நீங்கள் அது பற்றி கவலைப்படமாட்டீர்கள்!

நல்ல வேளையாக இன்று தமிழ் மக்களின் குரலை உலகம் உணரத் தொடங்கியுள்ளது' என்று அந்த ஒரு தமிழன் மேலும் எழுதியிருக்கிறார்.

இந்தக் கடிதங்களை எல்லாம் வெளியிடுவதன் மூலம், தனது இன வெறியை மறைக்க முடியாது. அதே சமயம் சமாதானம் முறிவடைந்தாலும் தமிழீழம் மலர்ந்தாலும் 'த ஐலண்ட்' ஆசிரியர் தமது பொறுப்புக்களை தட்டிக்கழிக்க முடியாது. ஏற்றுத்தான் ஆக வேண்டும்!


வெளிநாட்டில் வேலைவாய்ப்பு வழங்குவதில் ராஜ முத்திரை பதித்த

ராஜ் லங்கா ரூவர்ஸ்

நிறுவனத்தின் மகிழ்ச்சி தரும் செய்தி சவுதி அரேபியா, டோகா, கட்டார் போன்ற நாடுகளில் பலதரப்பட்ட வேலைவாய்ப்புக்கள்.

| | |
|---|---|
| சிவில் எஞ்சினியர் | 2500 றியால் |
| சிவில் போமன் | 1800 றியால் |
| வாகன எலக்ரீசியன் | 700-900 றியால் |
| வாகன ரிங்கர் | 700-900 றியால் |
| வாகன பெயின்ரர் | 700-900 றியால் |
| வெல்டர் | 800 றியால் |
| பிளம்பர் | 750 றியால் |
| மெக்கானிக் | 800 றியால் |
| மேசன் | 700 றியால் |
| பெயின்ரர் | 700 றியால் |
| லேபர் | 550 றியால் |

மேற்குறிப்பிடப்பட்ட வேலைவாய்ப்புக்களை பெறவிரும்பவர்கள் கொழும்பு சென்று, பெருந்தொகை பணத்தைச் செலவிட்டு நேரத்தையும் பணத்தையும் வீணடிக்காது யாழ் நகரில் இருந்துகொண்டே மிகக் குறுகிய காலத்தில் இங்கிருந்தே நேரடியாக உங்கள் பயணத்தை நீங்கள் மேற்கொள்ளும் அரிய வாய்ப்பு. எம்மை நாடியவர்கள் வெளிநாட்டில் தற்போது வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

நீங்களும் நாடுங்கள் என்றும் உங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் நண்பன் **ராஜ் லங்கா ரூவர்ஸ்**

முக்கிய குறிப்பு:-

❄ எம்மை நாடிவரும் தரகு முகவர்களிற்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

❄ எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை, எம்மை நேரடியாக நாடவும்.

முகவரி:- 220 A, 2 ம் குறுக்குத்தெரு,
ஆஸ்பத்திரி வீதி வழியாக,
யாழ்ப்பாணம்.

(சி.1829)

மாநகராட்சி ... யாழ்ப்பாண

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

நாற்சந்தியில் ஆட்களில்லை....

"கனகண்ணை வன்னிக்குப் போய் விட்டாராம் அவரின் நடுவிலான் கிளிநொச்சி துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டுள்ளான்"

"மணியத்தாரின் பேத்தி... அது தான் அவற்றை மூத்தமகனின் மூத்த மகளின் வித்துடல் வடமராட்சி எல்லங்குளம் துயிலுமில்லத்தில் இருக்கிறதாம்"

"சோமண்ணையின்ர கடைசித் தம்பியும் அங்கைதான். அதுதான் அவரும் அங்கைதான் போட்டார் போலிருக்கிறது.

"இன்று கதைக்க ஆட்களுமில்லை.... சும்மா அரட்டை அடிப்பதற்கான நாளுமல்ல....

"நாங்கள் நாள்முழுக்க வருஷம் முழுக்க கதைச்சு என்னத்தைக் கண்டம்..... வருஷத்திலை ஒருநாள் மட்டுமே தன் மக்களுடனும் உலகத்துடனும் மனந்திறந்து பேசும் தமிழர் தலைவரின் நாளும் மாவீரர் நாளான இன்றுதானே....!

"இன்று மட்டுமாவது சும்மா வம்பளக்காது, மௌனம் காத்து மாவீரரை நினைத்தபடி அந்தப் பெருந்தலைவரின் பேச்சைக் கேட்கக் காத்திருப்போமே....!

# திருமலை கிரனேட் தாக்குதல் சம்பவம்; முஸ்லிம் இளைஞர்கள் அட்டகாசம்!

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் முஸ்லிம் இளைஞர் குழுக்களின் அட்டகாசத்தால் பெரும் பதற்றநிலை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை கிரனேட் வீசலில் இரு முஸ்லிம்கள் அம் மாவட்டத்தில் கொல்லப்பட்டதையடுத்தே இந்தப் பதற்றநிலை நிலவி வருகின்றது.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பணிமனைக்கு அருகில் கூடிய முஸ்லிம் காடையர்கள் ரயர்களைப் போட்டு கொளுத்தியதுடன், பல்வேறு கோஷங்களை எழுப்பியும், கூச்சலிட்டும்பின் காலை ஐந்து மணியளவில் கலைந்து சென்றுள்ளார்கள்.

திருகோணமலையின் கிண்ணியா, மூதூர் மற்றும் நகரப்பகுதி முதலானவற்றில் பதற்றநிலைகளைத் தவிர்க்குமுகமாக பொலிஸார் மற்றும் படையினர் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4,10)

# மனித உரிமைக்குழுத் தலைவர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்வார்

(கொழும்பு)

இலங்கை தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ராதிகா குமாரசாமி தலைமையிலான குழுவொன்று, அடுத்த மாதம் முதலாம் திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளது.

மட்டக்களப்பில் தற்போதுள்ள நிலைமைகள் குறித்து ஆராயும் அதேவேளை, முஸ்லிம் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப் புலிகள் என பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்துவர்.

இப்பகுதியில் செயற்பட்டுவரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் முதலானவற்றுடனும் சந்திப்புக்களை நடத்தவுள்ள இவர்கள், தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் எந்தளவுக்கு இடம்பெறுகிறது என்பது குறித்தும் ஆராயவுள்ளனர்.

கடந்த காலங்களில் இங்கு இடம் பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான, சில விசாரணைகளையும் இவர்கள் நடத்துவதுடன் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள் முதலானவற்றையும் நடத்தவுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தலைவரின் பிறந்த...

யாழ் நகரப்பகுதியில் சில வர்த்தக நிலையங்களில் இத்தகைய இனிப்புப்பண்டங்கள் பரிமாறப்பட்டன. வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இத்தகைய நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

இதேவேளை தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வை முன்னிட்டு புலிகளின் குரல் வானொலியில் நடத்தப்பட்ட வாழ்த்து நிகழ்ச்சியில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் தொடர்பு கொண்ட தமிழ்மக்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவிததனர்.

அத்துடன் சர்வதேசரீதியிலும் பலநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிட்த்தக்கதாகும்.

மேலும் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை முதலியனவும் தமிழீழத்தேசிய தலைவருக்கு தமது பிறந்தநாள் வாழ்த்துச் செய்திகளைத் தெரிவித்துள்ளன.

# போர்நிறுத்தம் தொடர்ந்து...

அரசியல் சூழல் உருவாகும் வரை, விடுதலைப் புலிகள் பொறுமைகாப்பார்கள் என்று உறுதியளித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் சமாதானம் தொடர்பாக புலிகள் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் நோக்கிலேயே- ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர் கிறிஸ்பற்றன் இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

தென்னிலங்கை அரசியில் நெருக்கடி, இதனால் சமாதானப் பேச்சுக்கள் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப் பட்டது.

இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பில் தலைவர் பிரபாகரனுடன், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்

ஐரோப்பிய ஒன்றயத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹற்றன் வில்டன், வெளியுறவுப் பிரதி இயக்குனர் யோவ் ஜோன் ஜூன் அமைச்சரவை உறுப்பினர் பார்பரா பிரான்ஸ்டர், இலங்கைக்கான அலுவலர் ஜெற்றி எக்லன்ட், பேச்சாளர் எம்மா எட்வின் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்பற்றினர்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து கிறிஸ்பற்றன் தலைமையிலான குழுவினர் வன்னிப் பெருநிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவின் செயற்பாடுகளையும் நேரில் பார்வையிட்டனர். (202)

# தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்க அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும்

## கிழக்கு மாகாண தளபதி கேணல் கருணா

(மட்டக்களப்பு)

தமிழ்மக்களுடைய உரிமையை வழங்குவதற்கு தென்னிலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் புரிந்துணர்வுடன் முன்வரவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற மாவீரர்தின எழுச்சி ஆரம்பநாள் நிகழ்வில் கலந்துகொண்டபின், ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்மக்களுக்கான உரிமையை வழங்கவேண்டும் என்பது தொடர்பில் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் புரிந்துணர்வுடனும், ஒற்றுமையுடனும செயற்படவேண்டும். இல்லையெனில அதன் விளைவுகள் பாரதூரமாக அமையும் என்பதை புரிந்து கொண்டு செயற்படவேண்டும்.

அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டு, மீண்டும் சமாதானப் பேச்சுக்கு முன்வந்தால், அதற்கும் நாம் தயாராக இருக்கிறோம்.

தென்னிலங்கையில் உள்ள பெரும்பான்மை அரசியற் கட்சிகளுக்கிடையே அதிகாரப் போட்டிகள் ஏற்பட்டுள்ளன. இந்தக்கால கட்டத்தில் - தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருந்து, அமைதியைக் காக்கவேண்டும் எனவும் கருணா மேலும் தெரிவித்தார்.

## வடக்கு கிழக்கில் மழை தொடரும்

நாட்டின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மழை இன்றும் தொடர வாய்ப்பிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு வாய்ப்பிருக்கின்ற போதிலும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்வதற்கு அதிக சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன எனவும் அத்திணைக்களத்தின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேபாளப் பிரதமர் நேற்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

தற்போது கொழும்பில் தங்கியுள்ள நேபாளப் பிரதமர் தூர் பகதூர் தாப்பா நேற்று பிற்பகல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து உரையாடினார். சார்க் அமைப்பின் தலைமைப் பதவியை வகித்துக் கொணடிருக்கும் நாடு என்கின்ற ரீதியில் பிராந்திய ஒருமைப்பாடு, அரசியல் பொருளாதார உறவுகள் பற்றிப் பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சகல தேசாபிமானிகளும் ஒன்றிணைந்து வெளிநாட்டு தலையீட்டை தடுக்கவேண்டும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல தேசாபிமானிகளும் ஒன்றிணைந்து வெளிநாட்டு தலையீட்டினை எதிர்க்கவேண்டுமென ஜே.வி.பியின் பிரசாரச் செயலாள் விமல் வீரவன்ச அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கம்பஹா மாவட்டத்தில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணியினபோது உரை யாற்றுகையிலேயே வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் பொதுமக்கள் மிகவும பொறுப்புணர்வுடன, நேர்மையான வழியில் செல்லும உள்ளூர் அரசியல் தலைவர்களின் பின்னால் அணிதிரளவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான புரிந்துனர்வு ஒப்பந்தம் குறிதது கருத்து தெரிவித்த அவர் 2005 ஆம் ஆண்டுவரை தற்போதய ஒப்பந்தப் படி புலிகள் வடக்கு கிழக்கை ஆளுவர். அதன் பின் முழுவதுமாக அவர்களிடம் கையளிக்கப்படும். விடுதலைப்புலிகளின் தற்போதய திட்ட வரைபு தொடர்பாக பொதுமக்களின் கருத்தினை ஐக்கிய தேசிய முன்னனி கட்டாயம் அறியவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அந்தக்கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரான அநுராபண்டார நாயக்க ,சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ,ஜே.வி.பியினரும் கூட்டணி ஏற்படுத்தும் நிலையில் உள்ளனர். இந்தக் கூட்டணி நாட்டைப் பிரிவினையில் இருந்து பாதுகாப்பதற்கும்,அதனூடாக நாட்டினை அபிவிருத்திபடுத்துவதற்குமாகு[illegible] எனவும் அவர் தெரிவித்தார்

# நாகர்கோயிலில்...

மேற்கொண்டனர்.

நேற்றிரவு 9.00 மணிக்கு மீசாலை இராணுவ வைத்திய சாலைக்குச் சென்று, சடலங்களை நேரில் பார்வையிட்ட சாவகச்சேரி நீதவான் பா.சுப்பிரமணியம் விசாரணைகளை மேற்கொண்டார்.

32 இராணுவத்தினர் இரு அணிகளாகப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் நீர்நிரம்பியிருந்த வயல் பகுதியில் ஆழமான குழி ஒன்றில் வீழ்ந்ததில் இந்தச் சம்பவம் நடைபெற்றதாக நீதவான் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரியவந்தது. இறந்தவர்களின் சடலங்களை கொழும்பு சட்டவைத்திய அதிகாரிக்கு அனுப்பிப் பிரேதப் பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கையை நீதிமன்றத்துக்கு கையளிக்குமாறு உத்தரவிட்டதுடன் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதவான் பொலிஸாருக்குப் பணித்தார். (01, 202)

# திருமலையில்...

இதேவேளை, இந்தப் பகுதிக்கு நிலைமையைப் பார்வையிட வருகை தந்த திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் காடையர்களால் வழிமறிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

# சகல அதிகாரமும் கொண்ட...

கெடுபிடிகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எந்த அபிவிருத்தியும் இடம்பெற்றிருக்கவில்லை. ஆகவே யுத்தநிறுத்தத்தாலும், சமாதான முன்னெடுப்பாலும் அதிக பலாபலன்களைப் பெற்றது சிங்கள தேசமும், தென் பகுதியுமே. தமிழர் தாயகத்தில் எந்த அபிவிருத்தியும் முன்னேற்றமும் இல்லை என்பதைத் தலைவர் எடுத்துக் கூறியிருந்தார்.

கேள்வி: உங்களது கோரிக்கை தொடர்பாக அவர்கள் என்ன பதிலளித்திருந்தார்கள்?

அவர்களது கரிசனை முழுவதும் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி பற்றியதே. அதிகார இழுபறிப் போட்டிகளால் சமாதான நடவடிக்கைகள் குழப்பமுற்று யுத்தம் வெடித்துவிடுமோ என்ற நம்பிக்கை இன்னமுமே அவர்களிடம் உள்ளது. அத்துடன், தென்னிலங்கை அரசியல் நெருக்கடிக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே அவர்களது விருப்பம். அதனையே தலைவரும் தமது பேச்சுக்களில் எடுத்துக் கூறியுள்ளார்.

கேள்வி: ஜனாதிபதியுடன் தனது சந்திப்பு தொடர்பாக கிறிஸ் பற்றன் எதுவும் எடுத்துக் கூறியிருந்தாரா?

ஜனாதிபதியும் சமாதானத்தை பேச்சுக்களின் மூலமே தீர்வுகாண முடியும் என கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

கேள்வி: பிரதமருக்கான செய்தி எதுவும் அவரிடம் கூறியிருந்தீர்களா?

நாங்கள் நிதானமாக தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த அதிகாரப் போட்டிகள் முடிவுக்கு வந்து, தென்னிலங்கை அரசியலில் ஒரு உறுதிப்பாடு வந்து பேச்சுக்களை முன்னெடுக்கக் கூடிய சகல அதிகாரங்கள் பொருந்திய ஓர் அரசியல் தலைமை உருவாகும் வரை நாங்கள் பொறுமையாக இருக்கின்றோம் என்பதை அவருக்கு எடுத்துக் கூறியுள்ளோம். ஆகவே, ரணிலுக்கோ, ஜனாதிபதிக்கோ தகவல் அனுப்பத் தேவையில்லை. எனினும் இன்றைய மாவீரர்தின உரையில் புலிகளது நிலைப்பாடு தெளிவாக முன்னெடுக்கப்படும்.

கேள்வி: மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை இடம்பெறுமாயின், அது ஜனாதிபதி - பிரதமருடனான கூட்டிணைந்துடனா? அல்லது தனித்தரப்புடனா?

இதனை முடிவுசெய்யவேண்டியது தென்னிலங்கையில் இருக்கும் அதிகார மையங்களே ஏனெனில் நாங்கள் எங்களது மக்களது அபிலாஷைகளுக்கு ஏற்றவகையில் ஒரு தீர்வை எட்ட, பலமான ஒரு உறுதியான அதிகாரம் உள்ள தலைமையை எதிர்பார்க்கின்றோம். அது அவர்களைப் பொறுத்தது.

கேள்வி: அது சந்திரிகா பண்டாரநாயக்கா என்றாலும் பரவாயில்லையா?

சமாதான நடவடிக்கைகளில் அவர் எவ்வளவு உறுதிப்பாடாக இருக்கின்றார் என்பதைப் பொறுத்ததே அது.

கேள்வி: மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கை தொடர்பாக என்ன கருதுகிறீர்கள்?

பொதுவாக அவர் அனைத்து தரப்பையும் சந்தித்து வருகின்றார். சர்வதேச சமூகத்தின் விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியும் வருகின்றார். சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர்கள் அழுத்தங்களைப் பிரயோகித்துவருவதாகவும் நான் நினைக்கின்றேன்.

கேள்வி: தலைவரைச் சந்திப்பதற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டது பற்றி?

தென்னிலங்கையில் இனவாத சக்திகள் இதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு தமது முகத்தைக் காட்டியுள்ளனர். குறிப்பாக சமாதானத்திற்கு விரோதமானோர்கள் தமிழ் மக்களது அபிலாஷைகளுக்கு எ[illegible]ரானவர்கள். தீவர முயற்சியை[illegible] குழப்பும் இனவாத சக்திகளின் நடவடிக்கையே இது இவ்விடயத்தை ஐரோப்பிய யூனியன் எவ்வாறு பெரிதுபடுத்தவில்லையோ அவ்வாறே நாமும் பெரிதுபடுத்தவில்லை.

கேள்வி: தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரத்தன்மையால் பேச்சுக்கள் குழும்பியுள்ள நிலையில் இந்தியா தனது இராணுவத்தை தயாராக வைத்திருப்பதாகவும், சாத்தியமான இராணுவத் தலையீட்டுக்கு தாம் தயாராக இருப்பதாகவும், பிரதி இராணுவத்தளபதி கூறியிருப்பது பற்றி?

எங்கும் கொளகைகளை வகுத்து செயற்படுத்துவது இராணுவ மல்ல அந்த அரசு. ஆனால், வாஜ்பாய் உத்தரவிட்டதான உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. இராணுவத்தளபதி கூறியதாக ஊடகங்கள் மூலமே அறிந்தோம்.

அவர்கள் பல்வேறு நோக்கங்களுக்காக தமது இராணுவத்தை தயார் நிலையில் வைத்திருக்கலாம். அது அவர்களது நாட்டினது உரிமை. அவர்கள் இங்கு தலையீடு எதையும் மேற்கொள்ளாத நிலையில் கருத்தெதனையும் தெரிவிக்கமுடியாது.

கேள்வி: வடக்கு - கிழக்கு புனரமைப்பு உதவி தொடர்பாக எதுவும் கூறப்பட்டதா?

வடக்கு - கிழக்கு புனரமைப்புத் தொடர்பாக ஐரோப்பிய யூனியன் மிக ஆர்வமாகவே உள்ளது. ஆனால், அதற்கான சூழல் அமையவில்லை என்பது அவர்களது கருத்து. ஆயினும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் எனவும், ஆர்வமாக உள்ளனர். தென்னிலங்கை அரசியல் சூழல் இதனை தடுத்து குழப்பியுள்ளது.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.